பர்மா—மலாய் 0-1-3 இலங்கை—6 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

(வாரப் பதிப்பு)

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 ஓசை 2 | சென்னை—வெகுதானியளூ கார்த்திகைமீ 5உ ஞாயிற்றுக்கிழமை (20—11—38) | விலை அரைபளு

மறைந்த வீரன்

உயிரிழந்த துருக்கிக்கு உயிர் கொடுத்த வீரர், முஸ்தபா கமால் பாஷா. இவர் உயிருள்ள வரையில், துருக்கியைப் பங்குபோட நினைத்த ஐரோப்பிய வல்லரசுகளைத் துருக்கியின் அருகில் அணுகவும் விடவில்லை. துருக்கியைக் கண்டு அந்த வல்லரசுகள் நடுங்கும்படிக்கூடச் செய்தார். அப்பேர்ப்பட்ட வீராதி வீரர் எதிர்பாராதவிதமாக மறைந்து விட்டார். நல்ல பலம் பெற்று, முற்போக்கடைந்திருக்கும் துருக்கியின் எதிர்காலம் என்னவாகுமோ தெரியவில்லை. மறைந்த கமாலுக்குச் சமமாகத் துருக்கியில், மற்றொரு வீரர் தோன்றுவாரா வென்பதை பொறுத்துப் பார்ப்போம்.

மதராஸ் டி. சி. என்
கோல்டன் மேடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்



அசல் தங்க வளையல்களை விட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல, கறுக்காது.

2வருஷ உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 3 0 0
மத்திய சைஸ் 1¾" முதல் 2"க்குள் ஜதை ரூ 2 8 0
குழந்தை சைஸ் 1¾-க்கு உட்பட்டது ஜதை ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணா 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
280, வால்டாக்ஸ் ரோடு. பார்க் டவுன் மதராஸ்.

குறிப்பு:-"தமிழ் மணி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

2 அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேடலாக் இனாம்.

குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணா 12.
F. M. S.-க்கு ரூ. 2- ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும்.

ஏஜண்ட்:— ஜெ. ரகுபதி நாயுடு,
நெ. 101, இராஜவீதி, குமரகோஷ்டம் பக்கத்தில். பெரிய காஞ்சிபுரம்.

ஆப்ரேஷன் தேவையில்லை

தொண்டையிலும்,
நாசித்துவாரங்களிலும்
சதை வளர்ந்தால்

"டான்ஸிலிட்"

அற்புதமாய்க் குணப்படுத்தும்
இந்த அருமையான மருந்து பயோலாஜிகள் முறைப்படி கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பெருமையை அதிகமாக விவரித்து எழுதுவதை நிறுத்திச் சுருக்கிக் காட்டுகிறோம். தற்காலத்தில் தொண்டையில் உள்நாக்கின் இரு பக்கங்களிலும், நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் சகஜமாயிருக்கின்றது. இந்த வியாதிகளை 'டான்ஸிலிட்" அபூர்வமாகக் குணப்படுத்தும். நிற்க இந்த பரம ஔஷதம் சாப்பிட ஆரம்பித்தவுடன் ஜலிப்பு, இருமல், அடிக்கடி உண்டாகும் காச்சல் முதலியவைகளையும் போக்கி அபரிமிதமான பசி தீவத்தை பெருக்கி, தேகத்தைப் புஷ்டியாக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் ஒரு பாட்டல் வாங்கியுண்டால் இவற்றின் அபாரகுணம் நன்கு விளங்கும். இல்லையேல் எமக்கு தெரிவித்தால் விபரங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்ப சித்தமாயிருக்கின்றோம்.

விவரங்களுக்கு:— **ஆலன்கிளினிக்,** இராயப்பேட்டை மதராஸ்.

மாலய் நாட்டுக்கு ஸோல் ஏஜண்டு:—
செய்னு முஹம்மது அண்டு ஸன்ஸ்,
சிங்கப்பூர், கோலாலம்பூர், 22. பீச் தெரு, பினங்கு.
மற்றுமுள்ள எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

சர்ச்லைட்
கட்டிங்டைமண்டஸ்
வர்ஜீனியாமலைப்பிரதேசங்களில் உற்பத்தியாகி சிறந்த மின்சார சாஸ்திரிகளின் ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டு அசல் வைரங்களுக்கு இணையாக விளங்குவது

சர்ச்லைட் வைரங்கள்

S.தீன்சேட்
94, தங்கசாலை தெரு
சௌகார் பேட்டை
ஜி. டி. மதராஸ்.

தோடு சைஸ் கமலம் 1க்கு 0-8-0 கடுக்கன் சைஸ் கமலம் 1க்கு 0-7-0 பேசர் சைஸ் கமலம் 1க்கு 0-6-0

பலவீனத்தைப் பறக்கடித்து,
உடல் நலத்தையும்
தாது விருத்தியையும் தருவது
சி. எம். சாமி

மன்மத குளிகை என்பதை அறியுங்கள்

இள வயதில் துர்ச்செய்கைகளின் பலனால் ஏற்பட்ட பலவீனம், போகசக்திக் குறைவு, இவைகளை நிவர்த்தித்து, தளர்ந்த நரம்பை முறுக்கேற்றி மன உற்சாகம், வீரிய விருத்தி முதலியவைகளைக் கொடுக்கும். 20 குளிகை விலை ரூ. 2-0-0.

கிடைக்குமிடம்:—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.
2 டை பிராஞ்சு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
3 இம்பீரியல் பின்மென் அண்டு ஸ்டோர்ஸ்,
107, தாம்ஸன் தெரு, ரங்கூன். (கிழக்கு)

சதுரமான **மேஜை கெடியாரம்**
மிகவும் அழகாக அமைக்கப்பட்டது

அலாரம் உள்ளது ரூ. **4-15**



அலாரம் இல்லாதது ரூ. **3-15**

இந்த மேஜை கெடியாரம் உங்களது மேஜையை அழகுபடுத்தி அலங்காரமாக வைக்கும்.
உங்கள் நண்பர்களுக்கு பரிசளிக்கத்தக்கது.
ஆர்டர் செய்பவர்கள் தயவு செய்து முன்பணம் ரூ. 2 அனுப்பவும்.

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,
ரட்டன் பஜார் சென்னை.

பிராஞ்சுகள்:- 1242-1, ஆபித் ரோட் ஹைதராபாத் (டெக்கான்)
190, பி. மவுண்ட் ரோட், சென்னை.

டிரேட்மார்க்குகள் பெயர்கள்
லேபில்களை
கல்கத்தா ரிஜிஸ்டர்
AGENTS ஜி. எ. ஓர்க்ஸ
செய்ய 6. பந்தர் தெருவு மதராஸ்.

தஞ்சை இளவரசி மோகனு மீது காதல் கொண்ட மதுரை இளவரசர் சொக்கநாதன், மோகனுவை எப்படியும் கலியாணஞ் செய்து கொள்ளத் தீர்மானித்தார். தஞ்சையில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் அவர் தாயாரிடம் கூறி அவளையே மதுரை ராணி மங்கம்மாளிடம் அனுப்பி வைத்தார். மங்கம்மாள் ராணி, விஷயங்களை அறிந்து சந்தோஷப் பட்டாளாயினும், எப்படி அந்த விவாகத்தை நடத்தி வைப்பதென்று கலவரமடைந்தாள். தஞ்சை அரசருக்குத் தூது அனுப்பி, மோகனுவைச் சொக்கனுக்குக் கலியாணஞ் செய்து கொடுக்கும்படி கேட்க வேண்டும்; தஞ்சை அரசர் அதற்குச் சம்மதிக்காவிடில் யுத்தஞ் செய்தேனும், கலியாண காரியத்தை நடத்தி வைக்க வேண்டுமென்று முத்தம்மாள் ராணி கூறினாள். இந்நேரத்தில் மதுரை ராணுவ தளகர்த்தர் வீரசிங்கம் மங்கம்மாளிடம் வந்தார். மங்கம்மாள் ராணியிடமிருந்து சகல விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். தஞ்சை அரசரிடம் தூது செல்ல வேண்டுமென்ற யோசனையையும் ஒப்புக் கொண்டார்.

சொக்கநாதன்

தொடர் கதை

தஞ்சைக்குத் தூது

"நல்ல யோசனைதான்! ஆனால், தஞ்சை அரசர் மறுத்துவிட்டால்......அல்லது, அவர் நமது எதிரியாயிருப்பதால், தூதுவர்களை அவமதித்தால்... அல்லது,... ஆபத்து வந்தால்?..."

"நீங்கள் கூறுவதிலிருந்து தூதுவரை அனுப்ப உங்களுக்கு இஷ்டமில்லையென்று தெரிகிறது..."

"இஷ்டமில்லாமலில்லை; தூதுவரைக் கொண்டுதான் இக்காரியத்தை முடிக்க வேண்டும்; வேறு வழியில்லை...'

"அவ்வாறுயின் ஆபத்தைதப் பற்றி ஏன் யோசிக்கிறீர்கள்?..."

"இனி நடக்கப் போகும் காரியங்களை முன்னறிந்து உங்களுக்கு எச்சரிக்கை செய்யவே நான் அவ்வாறு கூறினேன்...நம் தூதுவர்களை அவமதித்தால்..."

"ஆம்; அதுவும் யோசிக்க வேண்டிய முக்கியமான விஷயந்தான்..."

"நமது தூதுவருக்கு நேரிடும் மானபங்கம் மதுரைக்கல்லவா?"

'உண்மைதான்...அப்படியானால் என்ன செய்வது?"

"தூதுவரை அனுப்பியே தீர வேண்டும்"

"ஆபத்து வந்தால்?..."

"யுத்தம்! ஆமாம்; யுத்தந்தான்! சந்தேகமே வேண்டாம்!"

"ஏன்?...யுத்தம் வராமல் தடுக்க முடியாதா?"

"முடியாது...தஞ்சை சதிகாரர் யுத்தத்துக்கே சூழ்ச்சி செய்கிறார்கள்...சொக்கநாத நாயக்கன் அதை முன்னறிந்தே தகுந்த ஏற்பாடு செய்து வருகிறார்."

"சொக்கனு? சொக்கனுக்கு என்ன தெரியும்?"

"சொக்கரை நீங்கள் லேசாக எண்ணிவிடக்கூடாது அவருக்குத் தீர்க்க புத்தியும், முன் யோசனையும் அதிகம்; சிறந்த ராஜ தந்திரி..."

"அப்படியா?...ஆமம்! எல்லாம் உங்களுடைய சாமர்த்தியந்தான்!... இப்பொழுது என்ன செய்வது? நீங்கள் பேசுவதைப் பார்த்தால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை...'!

"சரி அந்த வேலையை என்னிடம் விட்டு விடுங்கள்...நான் பார்த்துக் கொள்ளுகிறேன்..."

"உங்களிடமே விட்டு விடுகிறேன்; அதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், நீங்கள் என்னதான் செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்? அதையாவது சொல்லக் கூடாதா?"

"சொல்லாமலென்ன; தூதுவரை அனுப்ப உத்தேசித்திருக்கிறேன்."

"தூதுவரை அனுப்பினால், ஆபத்து என்று கூறினீர்களே? அப்படியானால் தூதுவர் எதற்கு? வேறு வழியில்லையா?"

"ஆபத்துக்கு அஞ்சினால் முடியுமா? நமது காரியம் கைகூட வேண்டாமா?...தூதுவரை அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை"

'எழுதிக் கேட்டால்?"

"பதில் கிடைக்காது...அது இன்னமும் மோசமாய்விடும்; ஒருவேளை நம்முடைய கடிதமே தஞ்சை அரசர் கைக்கே கிட்டாமற் போய் விடலாம்!...'

'போகட்டும்; யாரைத் தூதுவராக அனுப்ப எண்ணியிருக்கிறீர்கள்?"

"யாரையா? ஆமாம், காரியம் அதிக முக்கியமானது. வெகு சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது; இந்நிலைமையில் யாரை அனுப்புவது?..."

"நமது தளகர்த்தர்களில் ஒருவரை அனுப்பினால் என்ன?"

"கூடாது; மேலும், இதுவோ ஓர் சுப காரியம்...ஆதலால்..."

"ஆதலால் யாரை அனுப்பலாம்?"

"நான் போவதே நல்லதென நினைக்கிறேன்...நானே..."

"நீங்களா? தஞ்சைக்கு சென்றால்......ஆபத்து...அவமானம்!.... என்று நீங்கள்தான் சற்று முன் கூறினீர்கள்"

"உண்மைதான்.....அதற்காகவே நான் போக நிச்சயித்திருக்கிறேன்."

'நிச்சயித்து விட்டீர்களா?...நீங்கள் தான் போய் ஆக வேண்டுமா?"

"ஆம், நானே போயாகவேண்டும். வேறு வழியில்லை..."

"அப்படியானால், எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் செல்லுங்கள்... உங்களுக்கு அவமானமோ, ஆபத்தோ ஏதேனும் நேரிட்டால், அதை மதுரை ஒருபோதும் சகிக்காது..."

"அப்படி ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்...நான் சகலவற்றையும் கவனித்துக் கொள்ளுவேன்..."

'எப்போ புறப்பட யோசனை?"

"நாளைக்கே புறப்பட எண்ணியிருக்கிறேன்"

"நாளைக்கா?...அவ்வளவு அவசரமென்ன?"

"அவசரந்தான்.....அவசரமாகக் காரியத்தை ஆரம்பித்தால்தான் எதிரிக்குச் சந்தர்ப்பமில்லாமல் செய்து விடலாம். எதிரியைத் திடீரென மடக்குவதே முதல் யுத்ததந்திரம்."

"அந்தத் தந்திர மந்திரமெல்லாம் எங்களுக்குத் தெரியாது; சொக்கனைக் கலந்து ஆலோசித்தீர்களா?"

"இல்லை...அவரைக் கலந்து கொள்ளவே போகிறேன்; நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்; மற்றக் காரியங்களை நான் கவனித்துக் கொள்ளுவேன்..."

"உங்களிடம் மதுரையை அன்றே ஒப்புவித்தபின் நான் பயப்பட வேண்டிய அவசியமென்ன வந்தது?.. நீங்கள் ஒரு காரியத்தை மேற்கொண்டபின் நான் கலங்க வேண்டியதில்லை. உங்கள் பிரியம் போல் செய்து கொள்ளுங்கள்" என மங்கம்மாளும், சொக்கன் தாயும் ஏகோபித்துக் கூறினார்கள். வீரசிங்கன் போக எழுந்ததும், இரு அரசிகளும் எழுந்திருந்து, அவருக்கு மரியாதை செய்து, விடை கொடுத்து அனுப்பினார்கள்.

வீரசிங்கன் அங்கிருந்து புறப்பட்டு கோடியாக ராணுவ காரியால

(அடுத்த பக்கம் பார்க்க)

கிறிஸ்மஸ்! கிறிஸ்மஸ்!! கிறிஸ்மஸ்!!!

கர்த்தர் பிறந்த பாவனையான, குடில் சுரூப செட்டுகள்
தேவதாய், குழந்தை சுவாமி, அர்ச். சூசையப்பர்,
குளோரியா, மூன்று இராஜக்கள், இடையர்,
ஆடுமாடுகள் முதலிய 18 எண்ணங்கள்.

	4½"	6½"	9"
செட் 1-க்கு ரூ	6-0-0	12-8-0	25-0-0

தேவதாய், சூசையப்பர், ருஜாக்கள், இடையர்,
சம்மனசு முதலிய தனிச் சுரூபங்கள்

	6½"	9"
ஒன்றுக்கு ரூ	1-4-0	2-4-0

பாலன் (குழந்தை சாமி) சுரூபங்கள்

	3"	3½"	4	5"	6"
ஒன்றுக்கு	0-6-0	0-8-0	0-12-0	1-0-0	1-8-0

முழங்காலிலிருந்து வணங்கும் சம்மனசுகள்

	3"	4"	5"	7"	12"
ஜதை ஒன்றுக்கு	0-12-0	1-0-0	1-8-0	4-8-0	15-0-0

கடுத்தத்தில் பலவர்ணங்களால் அச்சிடப்பட்ட
குடில்கள் மூடவும் திறக்கவும் கூடியது
ஒவ்வொன்றுக்கு 0-2-0 0-4-0 0-6-0 0-8-0 1-0-0

சுவாமி பிறப்பைக் காட்டக் கூடிய கார்டுகள்
டஜன் 1-க்கு 2 அணா, 3 அணா, 4 அணா,
6 அணா, 8 அணா, 12 அணா.
கில்ற் போஸ்ட் கார்டுகள் ஒன்றுக்கு 2 அணா டஜன் ரூ 1-4-0
கிறிஸ்மஸ், புதுவருட சோபனக் கார்டுகள்,
பலரகங்களிலும் கிடைக்கும்
டஜன் 1-க்கு 6 அணா, 8 அணா 12 அணா,
ரூ 1-0-0, 1-8-0 2-0-0,

இன்னும் வேண்டிய மற்ற விபரங்களுக்கு ¾ அணா ஸ்டாம்பு அனுப்பினால் கிறிஸ்மஸ் சேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

தாமஸ் ரோட்ரிகோ & சன்ஸ்,
P. O. Box 1209 மதராஸ்.

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது

V. ARUMUCA CHETTY

விநாயகர் மார்க்கு சுருட்டுகள்

நெ. 13, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

தஞ்சைக்குத் தூது

(முன் பக்கத்தொடர்ச்சி)

[illegible]த்துக்குச் சென்றார் அங்குதான் சொக்கனும், ரங்கனும் அவருக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்; வீரசிங்கன் தலை கவிழ்ந்து, ஆழ்ந்த சிந்தனையுடன் சென்றார் அவர் முகத்தில் சதாகாலமும் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் புன்சிரிப்பு இல்லை முகத்தில் ஏதோ கவலை குடிகொண்டிருந்ததுபோலிருந்தது. சொக்கனும், ரங்கனும் அவர் முகத்தோற்றத்தைக் கண்டு பயந்தார்கள். எனினும், அறைக்குள் நுழைந்ததும், அவர் முகம் சட்டென மாறபட்டு புன்னகை செய்வதைக் கண்டு பயந்தெளிந்தார்கள். வீர சிங்கன் புன்னகை செய்தபோதிலும், பிரகாசமான அவர் கண்கள் ஆழ்ந்த யோசனையையே குறித்துக் காட்டின. சொக்கனை நோக்கிய வண்ணம் சிறிதுநேரம் மௌனமாக இருந்தார். அவருடைய மௌனமானது சொக்கன் மனதில் ஒரு விதக் கலக்கத்தை உண்டுபண்ணியது. அவரும் வீரசிங்கனை நோக்கினார்.

"பாட்டியையும், அம்மாவையும் கண்டு பேசினீர்களா?"

"ஆம், அங்கிருந்துதான் வருகிறேன்."

"என்ன சொன்னார்கள்? என்ன முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்?"

"உங்கள் ரகசியத்தை என்னிடம் தெரிவித்தார்கள். உங்கள் விவகாரந்தான்...அதற்காகத் தஞ்சை அரசரிடம் தூதுவரை அனுப்பவேண்டுமாம்."

"தூதுவரை அனுப்பினால் பயனுண்டா?"

"என்னமோ எனக்குத் தெரியாது...உங்கள் நோக்கமென்ன?"

"தஞ்சை சதிகாரர் நமக்கு எதிராகச் சதிசெய்துகொண்டிருக்கிறார்கள்; ஆகவே, அங்கு தூதுவரை அனுப்புவதால் பயன்படாதென்றே நினைக்கிறேன்."

"அப்படியானால் வேறு என்ன செய்யலாம்?"

"தூதுவரை அனுப்ப வேண்டியதுதான்...ஆனால்...அதனால், அவமதிப்போ, ஆபத்தோ ஏற்படலாம்"

"ஏன்?"

"அப்படித்தான் நினைக்கிறேன்...நிலைமை அவ்வாறிருக்கிறது"

"அதற்கு என்ன செய்யலாம்?"

"தூது போகிறவர் பொறுப்புள்ளவராய், முன் யோசனையுடன் நடந்துகொள்ளவேண்டும்..."

"யாரை அனுப்பலாம்?"

"அது உங்களைப் பொறுத்தது"

"உங்கள் அபிப்ராயத்தைக் கூறினால் நல்லது...ஏனெனில், என்னைவிட உங்களுக்குத் தஞ்சை விவகாரம் நன்கு தெரியும்."

"என்றாலும், என்னைவிட உங்களுக்கு உலக விவகாரம் நன்கு தெரியும்...நீங்களே உங்கள் இஷ்டம் போல் செய்துகொள்ளுங்கள்..."

"நீங்கள் குறிப்பாகக் கூறுவதிலிருந்து, நானே தஞ்சைக்கு போவது நலமென்று நீங்கள் கருதுவதுபோல் தெரிகிறது."

"அது உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது"

"ஆமாம்...நானே போயாகவேண்டும்; அதை ஏற்கனவே முடிவு செய்துவிட்டேன். பாட்டியிடமும் உங்கள் தாயாரிடமும் அப்படியே தெரிவித்துவிட்டு வந்தேன்."

"எப்பொழுது புறப்பட உங்கள் உத்தேசம்?"

"நாளைக்கே புறப்படத் தீர்மானித்திருக்கிறேன்."

"ஆமாம்; துரிதத்தில் காரியங்கள் செய்வது நல்லது"

"நான் புறப்பட்டதும், நீங்கள் ராணுவங்களை ஒழுங்காகப் பார்த்து, யுத்தத்துக்குத் தயாராக சகல ஏற்பாடுகளும் செய்ய வேண்டும்... மறந்துவிடக் கூடாது."

"யுத்தத்துக்கா?...ஏன்? யுத்தம் வராமல் தடுக்க..."

"முடியாது...யுத்தம் வந்துதான் தீரும்! அதுவும் அதி சீக்கிரத்தில். நீங்கள் சகல ஏற்பாடுகளையும் செய்து தயாராக இருக்கவேண்டும். நமது வீரர்கள் அனைவரையும் வரவழைத்து, அந்தரங்கமாக அவர்களுக்கு யோசனை கூறிவிட்டு, நான் தஞ்சைக்குப் புறப்படுவேன்...மதுரை வீரர் எப்பொழுதும் தயாராகவே இருப்பார்கள்."

"உங்கள் விஷயத்தில்..."

"என் விஷயத்தைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்...நான் தற்காப்புடனேயே செல்லுவேன்... என் உயிரைப்பற்றிப் பயமில்லை... மதுரைக்காக, என் அரசர் சொக்கநாத நாயக்கருக்காக இந்த உயிரைத் தத்தஞ் செய்ய நேர்ந்தால், அதுவே எனக்குப் பரம சந்தோஷம்! அதையே என் ஜீவிய காலமெல்லாம் நான் கோரிய பெரிய பாக்கியமாகக் கருதுவேன்!"

"உங்கள் அன்பையும், சேவையையும் என் உயிருள்ளளவும் மறவேன். மதுரை உள்ளளவும் மறக்க முடியாது. உங்களுக்கு ஆபத்து வந்தால்...தஞ்சை அதோகதிதான்!..." என்று ஆவேசம் பொங்கக் கூறினார் சொக்கநாதன். அதன்பின், வீரசிங்கனும், சொக்கநாத நாயக்கனும், ரங்கனும் சிறிது நேரம் அந்தரங்கமாகக் கலந்து ஆலோசித்தார்கள் சொக்கனும், ரங்கனும், யுத்த காரியாலயத்திலிருந்து வெளியேறினா. இருவர் முகத்திலும் பெரும் கலவரம் குடிகொண்டிருந்தது. அவர்கள் ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந்து சென்றனர். வழியில் இருவரும் வார்த்தையாடவே இல்லை. நேரடியாக சொக்கநாத நாயக்கனின் அந்தரங்க அறைக்குச் சென்றார்கள் அங்கு சிறிது நேரம் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சொக்கநாத நாயக்கன் அவசரமாக ஒரு கடிதம் எழுதினார். அதை மடித்து முத்திரையிட்டு ரங்கனிடம் கொடுத்தார். ரங்கன் அதை வாங்கிப் பத்திரமாக மடியில் வைத்துக்கொண்டான். அந்த அறையிலிருந்த சில முக்கியமான சாமான்களைத் தேடி யெடுத்துக்கொண்டு ரங்கன் அறையிலிருந்து வெளியேறினான். சொக்கன், அவனிடம் ரகசியமாக ஏதோ கூறிய பின், வாசல் வரையில் சென்று வழியனுப்பி வைத்தார். இதே நேரத்தில், வீரசிங்கன் வீற்றிருந்த மதுரை யுத்த காரியாலய அந்தரங்க அறையில், பல ராணுவ வீரர் வருவதும், போவதுமாக இருந்தார்கள். வீரசிங்கன், மதுரை ராணுவ தளகர்த்தர்களை வரவழைத்து, அவர்களுக்கு இனிமேல் என்ன செய்ய வேண்டுமென்று சில கட்டளைகள் போட்டார். தஞ்சைக்கும், மதுரைக்கும் யுத்தம் கட்டாயம் வந்தே தீருமென்றும், ஆகவே, யுத்தத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தயாராக இருக்கும்படியும் யாவரையும் எச்சரித்தார். ராணுவ வீரர்களில் குறிப்பிட்ட சிலரை மட்டும், அவருடன் தஞ்சைக்குப் புறப்படச் சித்தமாயிருக்கும்படி தெரிவித்தார். அந்த வீரர்களும் முகமலர்ச்சியுடன் வீரசிங்கன் அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள். வீரசிங்கன் தூது செல்லுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்தபின், மீண்டும் சொக்கநாதனிடஞ் சென்று, வேறு பல விஷயங்களைப்பற்றி அவரிடம் யோசனை கேட்டார். இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த அந்நேரத்தில், மதுரை அரண்மனையின் கிழக்குப் பக்கமுள்ள கோட்டை வாசல் வழியாக ஒருவன் திடீரென வெளிவந்தான். முக மூடியுடன், தேகமெங்கும் இரும்புக் கவசம் தரித்து, எவ்வித கலவரமுமின்றி, சாவதானமாக நடந்து சென்றான். மதுரை அரண்மனையைச் சுற்றியுள்ள பிரதேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும அவன் அறிந்திருந்தவனைபோல் காணப்பட்டான். கோட்டையிலிருந்து வெளியேறியதும், சிறிது தூரம் நடந்து சென்றான் அவன் வந்ததையும், போனதையும் எவரும் பார்க்கவில்லை. அவன் சென்ற திசை மரங்களடர்ந்திருந்தது. அங்குள்ள ஒரு மரத்தில் அழகான குதிரையொன்று கட்டப்பட்டிருந்தது. வந்தவன் நேரடியாகக் குதிரையை நோக்கிச் சென்றான். குதிரையும், அவனை அறிந்ததுபோல் தலையை அசைத்து மெதுவாகக் கனைத்தது. பயணத்துக்குத் தயாரானதுபோல் துள்ளிப் பாய்ந்தது. வந்தவன் குதிரையைத் தட்டிக் கொடுத்து சட்டென அதன் மீது பாய்ந்து உட்கார்ந்தான் மறுவிநாடியில் குதிரை தஞ்சையை நோக்கி வேகமாகப் பறந்து சென்றது.

(தொடரும்)

இனும்! "சிற்றின்பசாகரம்" புஸ்தகம் இனும்!!

ஜீவானந்த ரஸாயனம்

தளர்ந்த ரஜ உறுப்புகளைப் பலப்படுத்தி ஜீவ நரம்புகளில் பற்றி வரும் மேகவிஷ துர்நீர்களைப் போக்கி, கெட்ட சகவாச தோஷத்தினால் ஏற்பட்ட வெள்ளை வெட்டை, நீர் எரிச்சல் மூலச்சூடு. இந்திரிய ஒழுக்கு, நபும்ஸகம், சொர்ப்பன ஸ்கலிதம், போகத்தில் வெறுப்பு ஏற்படுதல், இரத்தமின்றி மெலிந்து தேகம் க்ஷீணித்து நடுக்கல், ஞாபகமறதி, மலபந்தம், ஸ்திரீகளுக்கு சூதக சமயத்தில் பெரும்பாடு போதல், அதிகமான சந்தானத்தினால் சரீர உறுப்புகள் பலஹீனப்படுதல் மர்மஸ்தானத்தில் எரிச்சல் வெள்ளை வெட்டை, முதலிய சகல ரோகங்களையும் நிர்மூலப்படுத்தித் தாது புஷ்டியையும் சற்புத்திர சந்தானத்தையும் உண்டுபண்ணுவதில் பெருமை பெற்றது. பத்தியமே இல்லை. பூர்ணகுணத்திற்கு 2 சேர்.

2 சேர் புட்டி 1க்கு ரூ. 3-8-0 1 சேர் புட்டி 1க்கு ரூ. 2-0-0

இந்தியாவுக்கு:—தபால் செலவு 2 சேர் 1க்கு அணா 13.

... ... 1 சேர் 1க்கு அணா 8.

மருந்தின் கிரயமும் தபால் செலவும் சேர்த்து முன்பணம் அனுப்பி விடவும். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லை.

விலாசம்:— மலையாள வைத்திய நிலையம்,
தபால் பெட்டி, நெ. 53 மதராஸ்.

ஆபீசுக்கு நேரில்வர விரும்புவோர்
நெ 2-66 கோணத் தெரு என வழங்கும் காளத்தியப்ப முதலி தெரு சமீபம் புது மார்க்கெட், சூளை மதராஸ்.

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த

வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை எப்பொழுதும் உபயோகியுங்கள்

நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ். (ஏஜண்டுகள் தேவை)

கொலை! ஜனநாயகம் கொலை!!

மூனிச் தீ எழுத்து!

ஜனநாயக தத்துவத்துக்குப் பிரிட்டனும், பிரான்சும் முன்னணியில் நிற்கும் நாடுகள். அந்த இருநாடுகளுமே இப்பொழுது ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டன என்றால், இனிமேல் ஜனநாயகம் தலையெடுப்பது அபூர்வந்தான்! ஜனநாயகத்தை ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் தத்தஞ் செய்துவிட்டன; சர்வாதிகாரிகளின் ஆட்சிக்கு ஜனநாயகம் தலைவணங்கிவிட்டது. மூனிச ஒப்பந்தமே இந்தத் துரோகத்துக்குக் காரணம். ஜனநாயக நண்பர்களாகிய பிரிட்டிஷாரும், பிரான்சுக்காரரும் ஜனநாயகத்துக்கு உலைவைக்கக்கூடிய சர்வாதிகாரிகளைத் தேடிச் சென்று, ஜனநாயகத்தை கொலைசெய்துவிட்டனர். ஹிட்லர், ஜனநாயகத்தைக் கொலை செய்யப்போவது மட்டுமல்ல, அதற்கே தீ வைத்து, அதைச் சுட்டுச் சாம்பலாக்கி விடுவாரென்பதில் சந்தேகமில்லை. இதற்கெல்லாம் காரணம் யார்? பிரிட்டனும், பிரான்சுந்தான்! இந்த இரு தேசங்களின் சார்பாக இரு தேச முதன் மந்திரிகளும் மூனிச் துரோகத்தில் கைச் சாத்திட்டனர்; அத்துடன் ஜனநாயகம் அழிந்தது. ஜனநாயகத்துக்கு மட்டுமா இவர்கள் உலை வைத்தார்கள்? இல்லை. மத்திய ஐரோப்பாவையே ஹிட்லருக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டார்கள். ஐரோப்பாவின் உயிர் நாடியாகிய ஜெக்கோவை ஹிட்லருக்குக் கொடுத்துவிட்டனர். ஐரோப்பாவின் வெற்றித் திறவுகோல் ஹிட்லர் கையிலிருக்கிறது. இனிமேல் ஹிட்லர் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஐரோப்பாவைச் சின்னாபின்னமாக்கவும் அவரால் முடியும். மற்றொரு யுத்தத்தை ஆரம்பித்து, ஐரோப்பாவை நசுக்காமல் ஹிட்லர் விடப்போவதில்லை.

ஜனநாயகத்தைப் படுகொலை செய்து, ஐரோப்பாவின் சமாதான திறவுகோலைக் கையில்வைத்திருக்கும் ஹிட்லர்.

சமாதான தேவதையைக் கொன்று, கொளுத்திவிட ஹிட்லர் சூழ்ச்சி செய்கிறார். அவருக்குப் பிரிட்டனும், பிரான்சும் துணைபோகின்றன.

ஐரோப்பாவின் உயிர் நாடியாகிய ஜெக்கோவை அநாதை ஆக்கிவிட்டது, மத்திய ஐரோப்பாவைப், பிரிட்டனும், பிரான்சும், சேர்ந்து சர்வாதிகாரிகளுக்குத் தத்தஞ் செய்துவிட்டன. இனிமேல், ஐரோப்பாவின் கதி என்னவாகும்? ஐரோப்பா, ஹிட்லர் காலடிகளில் விழுந்து, ஜெர்மனியின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஜெர்மனி, அதின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டுபோகும். பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் கிடைத்தது, ஒரு துண்டுக் காகிதந்தான்! ஹிட்லர் ஒப்பம் வைத்த ஒரு துண்டுக் காகிதமே மிச்சம்! பிரிட்டனும், பிரான்சும் பேசிய ஜனநாயகமெல்லாம் பாழ்!! அந்நாடுகள் ஜனநாயகத்தை அடியோடு கொலை செய்துவிட்டன.

உலகம் குட்டிச் சுவர்!!

ஹிட்லர் கொள்ளை!

சென்ற 6 மாதங்களில் ஹிட்லர் ஐரோப்பாவில் பெரிய கொள்ளை போட்டிருக்கிறார். சிதறிக்கிடந்த சுமார் 1 கோடி ஜெர்மானியரை ஜெர்மன் ஆட்சிக்குக் கொண்டு வந்துவிட்டார். சுமார் 40,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள், ஜெர்மன் ஆட்சிக்குட்பட்டுவிட்டன. ஹிட்லர் இன்று பெரிய வீரராக விளங்குகிறார். பேர் பெற்ற ஜெர்மன் ராஜ தந்திரி பிஸ்மார்க், மாஜிகெய்சர் முதலியவர்களைவிட ஹிட்லரை, ஜெர்மானியர் பெரிய வீரராகக் கொண்டாடுகிறார்கள். பிஸ்மார்க் போன்றவர்கள், இரத்தம் பெருக்கெடுத்தோட, ஆயுதங்களாலும், நிஷ்டூரத்தாலும் ஜெர்மன் சாம்ராஜ்யத்தை நிலைநாட்டினர். ஹிட்லரோ, ஒரு சொட்டு இரத்தஞ் சிந்தாமல், வெறும் மிரட்டலால் இன்று ஜெர்மனியின் பலத்தை அதிகரித்துக் கொண்டுபோகிறார்.



ஜனநாயகத்தைப் படுகொலை செய்யக் காரணமாயிருந்த பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன்.

ஜெக்கோ மாஜித் தலைவர் பினேஷ் ராணுவத் தளகர்த்தரிடமும் தற்போது முதன் மந்திரியாக இருக்கும் ஸைரோவியிடமும் விடைபெற்றுக் கொள்ளுகிறார். டாக்டர் பினேஷ் ஜெக்கோவிலிருந்து போய்விட்டார். அவர் அநேகமாக அமெரிக்கா செல்லக்கூடும். தற்போது இங்கிலாந்தில் மறைவான ஓரிடத்திலிருப்பதாகத் தெரிகிறது.

உறுமுகிறார்

இத்துடன் இவர் நின்றுவிடுவாரா? இல்லை. உலகத்தின் எத்திசையிலுமுள்ள ஜெர்மானியர் எல்லோரையும், ஜெர்மன் ஆட்சிக்குள் கொண்டுவரப்போவதாக அவர் உறுமுகிறார். அவர் எழுதிய "மெய்ன் கெம்ப்" என்னும் புஸ்தகத்திலும் அப்படியே எழுதியிருக்கிறார். பிரான்ஸ், ரஷியா, போலந்து, ருமேனியா, ஜெக்கோ, ஹங்கேரி, இதாலி, லக்ஸம்பர்க், பெல்ஜியம், டென்மார்க், லிதுவேனியா, லத்வியா, ஸ்விட்சர்லந்து, தென்மேற்கு ஆப்ரிக்கா, தங்கனிகா முதலிய தேசங்களிலெல்லாம் ஜெர்மனியர் இருக்கிறார்கள். அங்கு ஜெர்மனியர் சென்று குடி

(அடுத்த பக்கம் பார்க்க)

கொலை! ஜனநாயகம் கொலை!!

(முன் பக்கத் தொடர்ச்சி)

யேறியிருக்கிறார்கள். அமெரிக்கா பிரேஜில் அர்ஜென்டைன், சிலி தென் ஆஸ்திரேலியா, இந்தியாமுதலிய தேசங்களில்கூட ஏராளமான ஜெர்மனியர் சென்று குடியேறியிருக்கிறார்கள் அந்தத் தேசங்களில் வர்த்தகஞ்செய்து வருகின்றனர். இந்த ஜெர்மனியர் எல்லோரையும் ஒன்றுதிரட்டப் போகிறாரா, அல்லது, அவர்கள் குடியேறியிருக்கும் பிரதேசங்களை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும்படி வற்புறுத்தப் போகிறாரா? அந்தப் பிரதேசங்களை ஹிட்லருக்குக்கொடுக்காவிட்டால், அங்கு ஜெர்மன் நாஜிபரைக் கொண்டு சதா குட்டிக் குறும்பு செய்துகொண்டேயிருப்பார். இந்தக் குறும்புத்தனத்துக்கும், புரட்சிக்கும் பயந்து, ஹிட்லருக்குப் பிரிட்டனும், பிரான்சும் சரணாகதியடையப் போகின்றனவா? அப்படியானால், பிரிட்டனும், பிரான்சும் ஏன் உயிர் வாழ வேண்டும்? இந்த வல்லரசுகளின் கோழைத்தனத்தைக் கண்டே ஹிட்லரும், முஸோலினியும் துள்ளுகிறார்கள். பிரதேசங்களை அடக்கி ஆட்சி செய்ய விரும்புகிறார்கள். காலனிகளைக் கொடுக்கும்படி வற்புறுத்துகிறார்கள். அவர்கள் வற்புறுத்தலுக்கு இசையாது போனால் யுத்ததளவாடங்களைப் பெருக்கி, மீண்டும் பிரிட்டனையும், பிரான்சையும் பயமுறுத்துவார்களென்பதில் சந்தேகமில்லை

தற்கொலை!

ஜெர்மனியின் வறுமையும், அங் ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டு வருவதுமே இதற்குக் காரணம்; ஜெர்மனியருக்குப் போக்கிடம் வேண்டும். அதற்காகப் பிரிட்டனைப் பயமுறுத்துகின்றனர் காலனிகளைக் கேட்கின்றனர் பிரிட்டனுக்கோ ஜெர்மனியை எதிர்க்கத் தைரியமில்லை. ஜெக்கோ, ஆஸ்திரியா போன்ற ஜனநாயக நாடுகளை ஹிட்லருக்குத் தத்தஞ் செய்து, ஜனநாயகத்தைக்கொலை செய்து, அதின் காரியங்களைச் சாதித்துக்கொண்டு போகிறது சுயநலக் கொள்கையைத் தவிரப் பிரிட்டனுக்கு வேறு கொள்கை கிடையாது. இது தற்கொலைக்கே சமமாகும். பிஸ்மார்க் கண்ட கனவு உண்மையாகி விட்டது! பொஹிமியா மலைப் பிரதேசங்களை எவர் கைப்பற்றுகிறாரோ, அவரே மத்திய ஐரோப்பாவை அடக்கி ஆளத் திறமை படைத்தவராவார் என்று ஒரு காலத்தில் பிஸ்மார்க் சொன்னார் அதை இன்று ஹிட்லர் நிறைவேற்றி விட்டார். இன்று ஐரோப்பாவின் திறவு கோல் ஹிட்லர் கைக்கு வந்துவிட்டது. இந்தத் திறவுகோலையும், ஹிட்லருக்கு இந்த வசதிகளையும் செய்து கொடுத்தது பிரிட்டனும், பிரான்சுந்தான் ஹிட்லரை வலியத் தேடிச் சென்று அந்நாடுகள் இந்த வசதிகளைக் கொடுத்தன மத்திய ஐரோப்பாவின் திறவுகோல் ஹிட்லர் கையிலிருக்கும் வரையில் கிழக்கு ஐரோப்பாவுக்கும், ஐரோப்பிய தேசங்களுக்கும் ஆபத்து நிச்சயம் ஹிட்லர் என்றும், மத்திய ஐரோப்பாவைப் பயமுறுத்திக்கொண்டுதானிருப்பார். சமாதானத்துக்கே இடமிருக்காது யுத்த பீதி எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும். யுத்தம் வந்துவிட்டால், அது விஷ்டூரமான யுத்தமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. அந்த யுத்தத்தோடு, ஐரோப்பாவிலுள்ள சிறு தேசங்களெல்லாம் அழியவேண்டியதுதான். 1914-ம் வருடம் என்ன நிலைமை ஏற்பட்டிருந்ததோ, அதே நிலைமை தான் இன்று ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிறது.

ஸுடேடன் பிரதேசத்திலிருந்து ஜெக்கோவுக்கு அனுப்பப்பட்ட ஜெக்கோ ராணுவ வீரர். இவர் ஸுடேடன் பிரதேசத்தையும், அதின் கோட்டைகளையும் விட்டுவிட்டு வருவதற்குமுன் மலையுச்சியிலிருந்து, ஜெக்கோ இழந்த பிரதேசங்களை மனவருத்தத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஜெக்கோ வீரர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இந்தக் கொதிப்பு இருந்துகொண்டிருக்கிறது



மகா யுத்தம் முடிந்து ஜெக்கோ சுதந்திரம் பெற்ற காலமுதல், ஜெக்கோவில் ஜனநாயகத் தீ எரிந்துகொண்டிருந்தது ஜெக்கோவின் சுதந்திரத்தை ஹிட்லருக்குத் தத்தஞ்செய்து, ஜெர்மன் நாஜியர் ராணுவங்கள் ஜெக்கோவுக்குள் பிரவேசித்ததும், இவ்வளவு காலம் எரிந்துவந்த ஜனநாயகத் தீ அணைக்கப்பட்டது. சுதந்திரத் தீ எரிந்துகொண்டிருந்த தூண்களைப் படத்தில் காண்க.

ஆயுத பலம்

ஜெக்கோ, ஜெர்மனி கைக்கு வந்துவிட்டதால், ஜெர்மனிக்கு அதிக பலம் ஏற்பட்டு விட்டது ஜெக்கோ சர்க்கார் சுமார் 5 கோடி பவுன் செலவு செய்து கட்டி வைத்த மாயக் கோட்டைகளெல்லாம், இன்று, ஹிட்லர் கைக்கு வந்துவிட்டன. பெரிய மலைக் கோட்டைகளும் ஹிட்லருக்குச் சொந்தமாகி விட்டன. யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்வதில் ஜெக்கோ முதல்தரமான நாடு அங்கு உற்பத்தியாகும் யுத்த தளவாடங்களும் புகழ் வாய்ந்தவை அந்த யுத்த தளவாடங்களெல்லாம் ஜெர்மனிக்கு எதிராக உபயோகப்பட இருந்தன. ஆனல், இன்று நிலைமை வேறுவிதமாக மாறிவிட்டன. ஜெர்மனிக்கு எதிராக உபயோகிக்கப் படவேண்டிய யுத்த தளவாடங்களெல்லாம், இன்று ஜெர்மனிக்கு சாதகமாக திரும்பிவிட்டன ஜெக்கோ ராணுவம் அதின் யுத்த தளவாடங்கள், மாயக் கோட்டைகள் முதலியவற்றைச் சொந்தமாக்கிக் கொண்ட ஹிட்லர் ஐரோப்பாவைக் கைப்பற்ற நினைக்காமல் இருக்கமாட்டார் அந்த யுத்த தளவாடங்கள் ஜெர்மனிக்கு மட்டும் உபயோகமாகப்போவதில்லை சீனவுக்கு விரோதமாக ஜப்பானுக்குக் கொடுத்துதவுவார்; ஸ்பெயினுக்கு விரோதமாக இதாலிக்கும் கொடுத்துதவுவார் இறுதியில்மூனிச் துரோகத்தின் முடிவு என்ன? ஜனநாயகத்தின் கொலை! பல கோடிக் கணக்கான மக்கள் கொலைக்கே அது ஏதுவாக இருக்கிறது. ஹிட்லர் இருக்கும் வரையில், அல்லது, ஹிட்லரின் நாஜிக் கட்சி இருக்கும் வரையில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் ஆபத்து; ஐரோப்பாவுக்கும், கோடிக்கணக்கான மக்கள் உயிருக்கும் ஆபத்து எனத் திட்டமாகக் கூறலாம். மூனிச் ஒப்பந்தம் மையால் எழுதப் பட்டது. அதில் சேம்பர்லேனும், டலாடியரும், ஹிட்லரும், முஸோலினியும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். ஆனல், அந்த மூனிச் ஒப்பந்தத்தின் ஒவ்வொரு எழுத்தும் நெருப்பால் எழுதப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம் உலக அழிவுக்கு அந்த மூனிச் ஒப்பந்தமே காரணமாக இருக்கப் போகிறதென்பதில் சந்தேகமில்லை.



M. A. CHARI & CO.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

பெருங்காயத்தில் சிறந்தது

N. K. S.
பெருங்காயம் தான்
ஒரு முறை பரீக்ஷித்தால்
உண்மை விளங்கும்.
நாரன்தாஸ் கேசூர்தாஸ்
அன் சன்ஸ்
பெருங்காய வியாபாரிகள்
1-204, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு
ஜீ. டீ. மதராஸ்
கிளை ஆபீஸ்:— கும்பகோணம்.

மணத்திலும் குணத்திலும் சிறந்தது

நீபா
(வேப்பம், நீம், மார்கோஸா)
சோப்
GANGA WORKS, ADYAR, MADRAS.
கெ. 1-64, தங்கசாலை தெரு, பீ. டி. மதராஸ் (ஏஜண்டுகள் தேவை

கிளிப்பேச்சு

பொம்மை மன்னர் பல்டி!

பூனைக்கு மணி கட்டுவது யார்?

சுண்டெலிகள் சூழ்ச்சி!

வயிற்றுச் சாமிக்குப் பூஜை!

திவான் மூளைக்கு "டிஸ்கவுண்ட்"!

கிளியே, இவ்வாரம் விசேஷங்கள் என்ன?

விசேஷங்கள் பல உண்டு. இந்திய தேசீய இயக்கத்தின் ஆதிமூலமாக விளங்கும் காந்திஜியைப்பற்றி முதன் முதலில் கூறுகிறேன். காந்திஜி சேவாகிராமத்தில் சுகமே இருக்கிறார். அவருக்குக் கடிதங்கள் கட்டுக் கட்டாக வந்து குவிந்துகொண்டேயிருக்கின்றன ஏற்கனவே வந்திருக்கும் காகித மூட்டைகளைப் பிரித்துப் படிக்கக்கூட அவருக்கு நேரமில்லை. மேலும், மேலும் காகிதக் கட்டுகள் வந்து குவிந்துகொண்டேயிருந்தால், அவர் எப்படி அந்தக் கடிதங்களைப் பிரித்துப் படிக்கப் போகிறார்? ஆகவே, மகாத்மாவுக்குக் கடிதம் எழுதுவோர், கடிதங்கள் எழுதுவதை நிறுத்திக்கொள்ளும்படி அவரே கேட்டுக் கொண்டிருக்கிறார். கடிதங்கள்தான் கட்டுக் கட்டாக வருகின்றனவென்றால், அவரைப் பார்க்கத் தலைவர்களும், மக்களும் தினசரி வந்து குவிந்துகொண்டேயிருக்கிறார்கள். சர்தார் பட்டேல்கூடச் சமீபத்தில் காந்திஜியைக் கண்டு பேசச் சென்றார். திருவாங்கூரிலிருந்து, சமஸ்தானக் காங்கிரஸ் தூதுக் கோஷ்டியொன்று காந்திஜியைக் கலந்து பேச வந்திருக்கிறார்கள். திருவாங்கூர் சுதந்திரப் போராட்டத்தை இனிமேல் எவ்வாறு நடத்துவதென்பதைப்பற்றிக் காந்திஜியின் அபிப்ராயம் தெரிந்துகொள்ளவே அவர்கள் வந்திருக்கிறார்கள் சர்தார் பட்டேல், யமுனலால் பஜாஜ், கிருபாலினி முதலியோரையும் அவர்கள் கலந்து பேசினர். சர்தார் பட்டேல், ராஜகோட் சமஸ்தானப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தி வருகிறார். அங்கு அவருடைய மகளைக்கூட அனுப்பியிருக்கிறார். ராஜகோட் சமஸ்தானம ஒரு சிறு சுண்டைக்காய சமஸ்தானம். என்றாலும், அந்த மன்னரின் மண்டைக் கர்வமோ அவர் தலைக்குமேல் 50 அடி உயரத்தில் ஓங்கி வளர்ந்திருக்கிறது. ராஜகோட் சமஸ்தானப் போராட்டத்தை எளிதில் முடித்துக்கொள்ளச் சர்தார் எத்தனையோ சந்தர்ப்பங்கள் கொடுத்தார். மன்னர் வழிக்கு வரவில்லை அங்கு அடக்குமுறையும், சுடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது சர்தார் இரண்டிலொன்றைப் பார்த்துவிடத் தீர்மானித்துவிட்டார். இது சம்பந்தமாகவும் அவர் காந்திஜியைக் காணச் சென்றார்.

சமஸ்தானப் போராட்டங்கள் வளர்ந்து கொண்டு போகின்றனவே யொழிய அவை நின்ற பாடில்லை. இந்தப் போராட்டங்களுக்கு முடிவே இல்லையா?

முடிவு இல்லாமலென்ன? சமஸ்தான மன்னர்களின் இறுமாப்பே இந்த போராட்டங்கள் வளருவதற்குக் காரணம். சமஸ்தானப் பொம்மைகள் பழைய கண்மூடித் தர்பார் நடத்த நினைக்கின்றன. காலத்துக்குத் தகுந்தாற் போல் வளைந்து போகும் நல்ல குணம் கிடையாது. அதற்கான பரந்த நோக்கமும் கிடையாது. நப் போல் வளையென்ற ஔவையார் சொல்லும், அவர்கள் மண்டையில் ஏறவில்லை. பழைய மறத்தன்மையில் வெறிகொண்டிருக்கிறார்கள். மறத்தன்மையின் முடிவு என்ன? முறிவுதான்! அந்த முடிவுக்கே சமஸ்தான மன்னர்கள் வரப் போகிறார்கள். மைசூர் மன்னரும், திவானும், சமஸ்தானக் கிளர்ச்சியை மடக்க என்ன மெல்லாமோ அந்தர் பல்டி அடித்துப் பார்த்தார்கள்; அவர்கள் பாச்சா பலிக்கவில்லை. அவர்களுக்குப் புத்தி வந்தது. திருவாங்கூர் திவான் சி பி. ஆழந்தெரியாமல் காலை விட்டுக் கொண்டு அவதிப்படுகிறார். அவர் ஆரம்பித்த அடக்குமுறையை விழுங்கவும் முடியாமல், வெளியில் தள்ளவும் முடியாமல் அவதிப்படுகிறார் அனுமார் மீது சர் சி பி. க்கு அளவற்ற பக்தியிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று அவரே அந்த உன்னத அனுமார் அவதாரமாக விளங்குகிறார்! அடக்குமுறை ஆவேசம கொண்டு அலறுகிறார். நிஜாம் சமஸ்தானப் போராட்டமும் இந்த நிலைமையில் தானிருக்கிறது. நிஜாம் திவான் அக்பர் ஹைதாரி, பஜாஜுடனும் பட்டேலுடனும் கடிதப் போக்குவரத்துச் செய்து சமரசத்துக்குமுயற்சித்தார். அதுவும் முறிந்தது. அங்கும் அடக்குமுறை தலைவிரிகோலமாகத் தாண்டவமாடுகிறது. தென்கனலியிலும் பழைய குருடிதான். அங்கு போலீசார் சுட்டதில் சிலர் மாண்டதாகக்கூடச் செய்திகிடைத்திருக்கிறது. சோலாப்பூர் சமஸ்தானத்திலும் மன்னர் அடக்குமுறையில் வால்விட்டுப்பார்க்கிறார். இந்த மன்னர்கள் அடக்குமுறையை மூளையிலேயே கிள்ளி எறிந்தாலொழிய சமஸ்தான மக்கள் இனிமேல் தலையெடுக்க முடியாது. அவர்களுக்குப் பொறுப்பாட்சி கிடைப்பதும் வெறும் கனவாகவே முடியும். ஆகவே, சமஸ்தான மக்கள் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும் ஒன்றில் சுதந்தரத்துடன் வாழ்வது; இன்றேல், சுதந்திரப்போர் தொடுத்துப் போரில் மடிந்து வீர சுவர்க்கம் எய்துவது என்ற உறுதியுடன் போராட்டத்தை நடத்திச்செல்ல வேண்டும். சர்தாரும், காங்கிரஸ் தலைவர்களும், சமஸ்தானப் போராட்டங்களில் கவலைகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். இதுவும் சமஸ்தான மக்களின் அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். இதிலும் பெரிய அதிர்ஷ்டமொன்று கிட்டியிருக்கிறது அகில இந்திய சமஸ்தானக் காங்கிரசை பாஞ்சாலத்தில் நடத்தத் தீர்மானித்திருந்தார்கள் அதற்குப் பண்டித ஜவார்லால் நேருவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அவரும், அவருடைய குமாரியுடன் இந்தியாவுக்கு வந்துவிட்டார்

சரிதான், அப்படியானால் சமஸ்தானங்களில் நடக்கும் சுதந்திரப் போராட்டங்கள் இனிமேல் தீவிரமாக நடக்குமென்பதில் சந்தேகமே வேண்டாம் ஜவார்லாலும், குமாரியும் சுகந்தானே?

ஆமாம், இருவரும் பூர்ண சுகத்தோடு, பம்பாய் வந்து இறங்கினார்கள். பண்டித ஜவார்லாலுக்குப் பம்பாயில் சிறப்பாக வரவேற்புக் கிடைத்தது அவருடைய சகோதரி தேவி எஸ் ஆர். பண்டிட். ஆகாய விமான மார்க்கமாக இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார். ஐக்ய மாகாண மந்திரி பதவியையும் ஏற்றுக்கொண்டார். பண்டித ஜவார்லால் பம்பாய் வந்தவுடன் இந்திய அரசியல் நிலைமையைப் பற்றியே வெகு அக்கரையுடன் விசாரித்தார் அவர் தலைமை வகிக்கும் அகில இந்திய சுதேச சமஸ்தானக் காங்கிரஸ் மகாநாட்டை ராஜ்கோட்டில் நடத்தப் போவதாகக் கேள்வி ஜவார்லால் என்றாலே சுதேச மன்னர்களுக்குச் சிம்ம சொற்பனம். அதிலும், அவர் சமஸ்தான காங்கிரசுக்குத் தலைமை வகிப்பதென்றால், மன்னர்கள் நிலைமையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இதற்குள் அவர்கள் அடிவயிற்றில் இடி விழுந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை சமஸ்தான காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டபின் அவர் சும்மாயிருக்க மாட்டார். சமஸ்தானங்களின் சுதந்திரப் போராட்டத்தை நடத்தி இரண்டிலொன்று பார்த்தே தீர்த்துவிடுவார்.

ஆமாம்; அதற்குச் சந்தேகமே வேண்டாம். நல்ல நேரத்தில் ஜவார்லாலும் வந்து சேர்ந்தார்; நல்ல நேரத்தில் அவர் சமஸ்தானக் காங்கிரசுக்குத் தலைமை வகிக்கப் போகிறார்! கொடுக்கிற தெய்வம எப்படியும் கொடுத்தே தீரும்.

சந்தேகமென்ன? இந்திய சமஸ்தான மக்கள் சுதந்திரமடையும் காலம் நெருங்கிவிட்டது; அதற்காகவே ஜவார்லால் தலைவராக வருகிறார். அது தெய்வமாகச் செய்த ஏற்பாடு என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கிடையில், சமஸ்தான திவான் சுண்டெலிகள் கூடி, சில சூழ்ச்சிகள் செய்ததாகத் தெரிகிறது. பூனைக்கு மணி கட்டச் சுண்டெலிகள் கூடி யோசித்தமாதிரி காங்கிரசை அழிக்கவும், காங்கிரஸ் அதிகாரத்தை யொழிக்கவும் அந்தச் சுண்டெலி திவான்கள் யோசனை போட்டார்களாம்! ஆனால், பூனைக்கு மணி கட்டுவது யார்? அதற்குத்தான் ஒரு சுண்டெலியையும் கூடக் காணோம்! பம்பாயில திருவாங்கூர், ஹைதராபாத், குவாலியர், சோலாப்பூர், பரோடா, சமஸ்தானங்களின் திவான்கள் மகாநாடு நடந்தது. சமஸ்தானங்களில பற்றி எரியும் பொறுப்பாட்சிப் போராட்டத்தை நசுக்க யோசனை போட்டார்கள்; புத்தி ஓடவில்லை. அந்தரங்கமாக என்னமெல்லாமோ முணுமுணுத்துக்கொண்டார்கள். இஷ்ட தேவதைக்கும், வயிற்றுச் சாமிகளுக்கும் நன்றாக சாப்பாடு போட்டார்கள் ஒரு யுக்தி அவர்கள் மூளையில் ரசாசித்தது! அது என்ன தெரியுமா? சமஸ்தானங்களில் ஏற்பட்டிருக்கும் போராட்டங்களை அடக்க வேண்டுமானால், காங்கிரஸை நசுக்க வேண்டும். அது அதிகாரத்துக்கு வரவிடாமல் தடுக்கவேண்டும். பெடரேஷனை அமுலுக்குக்கொண்டுவரப் போகிறார்கள். ஹிந்து-முஸ்லிம் சமரசம் ஏற்படாமல், காங்கிரஸ் பெடரேஷனில் மெஜாரிட்டியாக வர முடியாது. காங்கிரஸ் மத்திய சர்க்கார் ஆட்சியைக் கைப்பற்றவிடாமல் தடுக்க வேண்டும்; அதற்காக முஸ்லிம்களைத் தட்டிக் கொடுக்க வேண்டும். இதுதான் திவான் சுண்டெலிகள் போட்ட திட்டம். இதே நோக்கத்துடன் அவர்கள் வைசிராய்க்கும் சில நிபந்தனைகள் போட்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது, பெடரேஷனை அமுலுக்குக் கொண்டுவர வைசிராய் விரும்பினால், அவர் அடியோடு, காங்கிரஸ் உறவை முறித்துவிட வேண்டும்; காங்கிரஸ்காரர் கோரிக்கைகளுக்கு இணங்கக்கூடாது. இதுதான்

(அடுத்த பக்கம் பார்க்க)

கிளிப்பேச்சு

(முன் பக்கத்தொடர்ச்சி)

திவான்கள் நிபந்தனை. வைசிராய் அவர்களுக்கு என்ன பதில் சொன்னாரென்பது தெரியாது. பெடரேஷன் அமுலுக்கு வருமா, வராதா என்பதே இன்னமும் சந்தேகத்திலிருக்கிறது. காங்கிரஸ் மனம் வைத்தாலொழிய பெடரேஷன் அரைநிமிஷங்கூட இந்தியாவில் அமுலிலிருக்க முடியாது. அந்தப் பெடரேஷனை அடியோடு ஒழிக்கக் காங்கிரஸ்காரர் கங்கணம் கட்டியிருக்கிறார்கள். சமஸ்தான மன்னர்களல்ல, திவான்களல்ல, முஸ்லிம் லீக் முல்லாக்களல்ல, யார் பெடரேஷனை ஆதரித்தபோதிலும், காங்கிரஸ்காரர் அதை எதிர்த்தே தீருவார்கள். இன்றேல், காங்கிரஸ்காரர் கோரிக்கைக்குப் பெடரேஷனைத் திருத்தியாகவேண்டும். காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாத பெடரேஷன் அரை நிமிஷமும் நிற்காது. இந்த அவதியில், திவான்கள் வைசிராய்க்கு நிபந்தனை போட்டது எனக்குச் சிரிப்பாகவே இருக்கிறது.

அடக்குமுறையில் வெறி கொண்டிருக்கும் திவான்கள் புத்தியில் சிறிது தெளிவு ஏற்பட்டிருக்கலாம். அதனால் தான் அவர்கள் அந்த நிபந்தனை போட்டிருக்கிறார்கள்! திவான்கள் மூளைக்குக்கொஞ்சம் "டிஸ்கவுன்ட்" கொடுக்க வேண்டியதுதான்!

எவ்வளவு "டிஸ்கவுன்ட்" வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால், உண்மையை மறைத்துத் தேசத்துக்கே துரோகஞ் செய்ய நினைக்கும் இந்தத் திவான்கள் உருப்படுவார்களா? உருவப்படவே மாட்டார்கள். இந்தத் திவான்கள் பதவிதான் என்ன சாஸ்வதமா? இந்த அற்பப் பதவிகளுக்காகத் தேசத்துக்கே துரோகம் நினைப்பதா? இந்தத் தோஷம் அவர்கள் தலைமுறை தலைமுறையாக விடாதென்பது நிச்சயம்.

அவர்கள் எக்கேடோ கெட்டு ஒழியட்டும்; வேறு விசேஷமுண்டா?

வைசிராய் இந்தத் திவான்களையும், பொம்மை மன்னர்களையும் நம்பி இருக்கவில்லை. துர்புத்தி மந்திரிகளால் அரசக்கு ஈனம் என்று சொல்லுவார்கள்; வைசிராய் இவர்கள் துர்புத்தியைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை; அவர் காங்கிரஸை வழிக்குக் கொண்டுவருவதிலேயே கண்ணயிருக்கிறாராம். சுமார் 125 சமஸ்தானங்களுக்குக் கடிதம் எழுதி, அவர்கள், பெடரேஷனில் சேர விரும்புகிறார்களா, இல்லையா வென்று கேட்டிருக்கிறாராம். மெஜாரிட்டி சமஸ்தானங்கள் பெடரேஷனில் சேர ஒப்புக் கொண்டால், 1940 வருட ஆரம்பத்தில் பெடரேஷனை அமுலுக்குக் கொண்டுவரப் போகிறாராம்! இன்றேல், அடுத்த வருடமே, அதாவது, சமஸ்தான மன்னர்களின் சம்மதம் கிடைத்ததும், ஒரு மகாநாடு கூட்ட யோசனை போட்டிருக்கிறாராம். வட்ட மேஜை மகாநாடு இந்தியாவிலேயே கூடப் போகிறதாம்! அந்த மகாநாட்டில், சகல கட்சிகளுக்கும் பிரதிநிதித்வம் கொடுத்து, பெடரேஷன் சம்பந்தமாக ஒரு முடிவு செய்ய உத்தேசித்திருக்கிறாராம்!

அதுவும் நல்ல யோசனை தான். பெடரேஷன் கதி தான் எப்படியாகிறதென்று பார்ப்போம். வேறு விசேஷமென்ன?

ஸிந்து மாகாண முதன் மந்திரி அல்லாபக்ஸும் காந்திஜியைக்கண்டு பேசினார். ஸிந்துவில் மந்திரிசபைக்குக் காங்கிரஸ்காரர் உதவியைத் தேடியிருக்கிறார். காந்திஜி சர்தாருடன் யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். அந்த முடிவு தெரியவில்லை. ஆனால், ஸிந்துவிலும் காங்கிரசை ஆதரிக்கும் மந்திரி சபை ஏற்படுமென்றே நினைக்கிறேன். இதற்கிடையில் வங்காளத்தில் மந்திரி சபையில் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. வங்க மந்திரி சபையில் 10 மந்திரிகளே இருக்கின்றனர். வங்காள பிரதம மந்திரி பஸ்லுல் ஹக் அவருடைய மந்திரிசபையைப் பாதுகாத்துக்கொள்ள, அவரை எதிர்த்த சுயேட்சைப் பிரஜா கட்சித் தலைவர் தமிஜுத்தீன் அஹமதுக்கு ஒரு மந்திரி பதவி கொடுத்திருக்கிறார். பிரஜா கட்சித் தலைவர் ஷம்ஷுத்தீன் அஹமதுக்கும் அடுத்த மாதம் ஒரு மந்திரி பதவி கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். வங்காளத்தில் மந்திரிகள் 12 பேர். ஹக் இப்படியே மாதம் ஒன்றுக்கு ஒரு மந்திரி பதவி கொடுத்துக்கொண்டே போனால், வங்காள அசெம்பிளியே மந்திரி மயமாக மாறிவிடும். அப்புறம் ஹக் மந்திரி சபைக்கு அழிவே இருக்காது. ஹக் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் நல்லது. ஆனால், அவருக்குக் காங்கிரஸ்காரர் மீது பயம் இருந்துகொண்டேயிருக்கிறது. சமீபத்தில், அவருடைய சிங்கம், புலி, கரடிப் பாய்ச்சல்களெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டன. காங்கிரஸ்காரருடன் சேர்ந்துகொண்டால் அவருக்கு முதன் மந்திரி பதவி கிடைக்குமாவென்று கூடப் பேரம் பேசினாராம். அநேகமாக வங்காளத்தில் காங்கிரஸ் கூட்டு மந்திரி சபை ஏற்படலாம். அப்படியானால், ஹக்தான் பிரதம மந்திரியாக விருப்பாராம்! கூட்டு மந்திரி சபை ஏற்பட்டால் மற்ற மந்திரிகள் கதி என்னவாகுமோ தெரியவில்லை. லீக் முஸ்லிம்களுக்கு இப்பொழுதே வயிற்றில் கலக்கமெடுத்து விட்டதாகக் கேள்வி.

அப்படியானால், ஜின்னா பாடுதான் பெரும் திண்டாட்டமாக வந்துமுடியும். அவர் வங்காளத்தில் இனிமேல் தலைகாட்டவும் முடியாது.

வங்காளத்திலா? ஐயோ பாவம்! பம்பாயிலேயே அவரால் தலைகாட்ட முடியவில்லை. ஜின்னா ஒரு பார்ஸிப் பெண்ணை மணந்திருந்தார்; அப்பெண் நல்ல பணக்காரக் குடும்பம். அந்தப் பார்ஸிப்பெண் வயிற்றில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தப் பெண் சமீபத்தில் ஒரு பார்ஸிக்காரரையே மணந்துகொண்டாள். அந்தப் பார்ஸிக்காரர் பெரிய பணக்காரர். மில் சொந்தக்காரரான வாடியா குடும்பத்தில் 'பிறந்தவர்; பார்ஸியேயானலும், அவர் கிறிஸ்துவர். ஜின்னாவின் மகள் பார்ஸிக் கிறிஸ்துவரை மணந்து, கிறிஸ்துவளாகிவிட்டாள் மகள் கலியாணத்தில்கூட ஜின்னா தலை காட்டவில்லை அவர் லீகை அடக்கிவைத்திருப்பதுபோல, அவருடைய மகளை அடக்கிவைக்க முடியவில்லை பூர்ண சுதந்திரம் கொடுத்துவிட்டார். மகளும் இந்தப் பூர்ண சுதந்திரத்தைப் பூர்ணமாக உபயோகித்துக்கொண்டாள்; இதில் தவறு ஒன்றுமே இல்லை.

ஆமாம், பெண்களுக்குப் பூர்ண சுதந்திரம் மகா அத்யாவசியந்தான். தென்னாட்டில் சில தமிழ் தாய்மார்களும், சகோதரிகளும் பூர்ண சுதந்திரம் அநுபவிக்கவில்லையா?

உண்மைதான்; அதிலும் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த தமிழ் தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும் சர்வ பரிபூர்ண சுதந்திரந்தான்; அவர்கள் சுதந்திரத்தில் ஒரு குறையும் கிடையாது. குறைக்கே வழியில்லை. புருஷன் வேஷ்டி அவைத்துக் கேட்டால், புருஷனிடம் ரவிக்கையையும், சேலையையும் துவைத்துக் கேட்கும் சுதந்திரத்துக்கு மிதமிஞ்சிய வேறு சுதந்திரம் இருக்கிறது? தமிழ் நாட்டுத் தாய்மார்கள் விழிப்படைந்து விட்டார்கள் அவர்கள் விழிப்பு ஆடவர் துக்கத்தில் போய் நிற்கக்கூடாது. அல்லது அந்த ஆடவர், சமையலறைக்குள் போய் சரணாகதியடையக் கூடாதென்பதே எனது கவலை. இந்தப் பெண்கள் சுதந்திரம் எங்குதான் போய் நிற்கிறதென்று பார்ப்போம்

எங்கு போய் நிற்கும்? புகையாய்ப் போய்தான் நிற்கும் அறநெறியையும் ஒழுக்கத்தையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்காத எந்த இயக்கத்துக்கும், அந்த கதிதான் கிடைக்கும்

மெய்தான்; இவ்வித இயக்கங்கள் எத்தனையோ தோன்றி, மண்ணோடு மண்ணாகப் புதைந்திருக்கின்றன. இந்த சிறு இயக்கம் எம்மாத்திரம்? சத்தியத்துக்கே உறைவிடமாக விளங்கும் காந்திஜி ஆரம்பித்த இயக்கத்திற்குக்கூட எத்தனை தடை எத்தனை எதிர்ப்பு?. உதாரணமாக வங்க ராஜியக் கைதிகள் விடுதலை சம்பந்தமாகக் காந்திஜி எவ்வளவோ முயற்சியெடுத்தார். அவர் பூர்ண வெற்றியடையவில்லை. வங்க சர்க்காரின் திமிரும், அசட்டுத்தனமுமே காந்திஜி தோல்விக்குக் காரணம். ஆனால், அவர் தோல்வி சொற்பகாலத்துக்குத்தான். வங்காளத்தில் இளைஞர்கள் தீவிரமாகக் கிளர்ச்சியை ஆரம்பித்து விட்டார்கள். சகல ராஜியக் கைதிகளையும், எந்த நிபந்தனையுமின்றி விடுதலை செய்யும் வரையில் அவர்கள் கிளர்ச்சியை நிறுத்தப் போவதில்லையென்று சபதஞ் செய்திருக்கிறார்கள். இந்தக் கிளர்ச்சியை சுபாஷ் பாபுவே ஆரம்பித்து வைத்தார். வங்க சர்க்காரை பணியவைக்காமல் விடுவதில்லையென்று அவர் கங்கணம் கட்டியிருக்கிறார். வங்க சர்க்கார் பணிந்துதான் தீருவார்கள். அதற்குச் சந்தேகமே இல்லை. காந்திஜி முயற்சி இறுதியில் வெற்றியில்தான் முடியும்.

வேறு விசேஷம் உண்டா?

வடநாட்டில் மாணவர்கள் எழுச்சியையும், உற்சாகத்தையும் காண எனக்குப் பொறாமையாக இருக்கிறது: தென்னாட்டில் மாணவர்கள் இயக்கத்தையோ, இளைஞரின் எழுச்சியையோ காணோம். எங்கேயோ அத்தி பூத்தாற்போல் மாணவர்களும், இளைஞர்களும் கூட்டம் போடுகிறார்கள். அத்துடன் இவர்களைப்பற்றிய பேச்சையே காணோம். பீகாரிலும், டில்லியிலும், மாணவர்கள் கூட்டத்தில், தேவி சரோஜினி, புலாபாய், அஸாப் அலி போன்ற தலைவர்கள் பேசி, மாணவர்களுக்கு உற்சாகமூட்டினார்கள். தென்னாட்டில் அவ்வித உற்சாகத்தையும் காணோம்; உற்சாகமூட்டக்கூடிய தலைவர்களையும் காணோம் இது தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டந்தான்! தமிழ் இளைஞர்கள் அதனால் மனமுடைந்துவிடக் கூடாது. இளைஞர் வீரத்தையும், உற்சாகத்தையும் தூண்டிவிடத் தூண்டுகோல் வேண்டாம்; இளைஞர் வீரத்துடன் முன்வரவேண்டும். தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களை, இடுக்கண்களை களைந்துவிட முன்வர வேண்டும். தூண்டுதலால் ஏற்படும் வீரத்திலும், உற்சாகத்திலும் இயற்கையில் பொங்கி எழும் வீரமே நிலையுள்ளது. அதுவே வேண்டும். தமிழ் இளைஞர் உடனே முன்வருவார்களாக. தமிழ் நாட்டின் கௌரவத்தையும் நற்பெயரையும் பாதுகாக்க மார் தட்டி வெளி வருவார்களாக.

ஷாக்புரூப் லிவர் கைக்கடிகாரம்

எந்தவித தொழிலாளரும் அதை உபயோகப் படுத்தலாம். மிகவும் உறுதியான மிஷின். ஏதோ கை தவறுதலாக கீழே விழுந்த போதிலும் கடிகாரத்திற்கு ஒருவிதமான அபாயமும் ஏற்படாது. மிகவும் குறைந்த விலை இரண்டு வருஷ உத்திரவாதத்துடன் லிவர் ரவுண்டு கிளாஸ் ரவுண்டு கேஸ் கடிகாரத்தின் விலை ரூ. 3-15-0 ரவுண்டு கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 4-12-0 சதுர கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ.7-8-0

ஹெட் ஆபீஸ்:—ஸ்டார் வாச் கம்பெனி, மூர்மார்க்கட் சென்னை.

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,

தமிழ்ச் சட்ட புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
ஸ்டாம்பு, ரெஜிஸ்டர் பல வித பத்திரங்கள் எழுதும் மாதிரியுடன் விவகார சிந்தாமணி ...	2	8
உயில், பாகம், வார்சு பாத்தியம், ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய ஹிந்துலா	2	0
சிவில்விவகாரம் பூர்த்தியாயடங்கிய சிவில்லா	3	0
போலீஸ் மாஜிஸ்ட்ரேட் சம்பந்தமான கிரிமினல் லா	3	0
விவாக வயது சட்டம்	1	0
புது கிராம முனிசீப் சட்டம்	1	8
கிராம சுகாதாரம்	0	2
கிராம பஞ்சாயத்து கோர்ட் சட்டம்	1	4
கிராம கர்ணம் மானுயல்	1	4
லோகல் போர்ட் ஆக்ட்	2	0
குற்ற சம்பந்தமான இந்தியன் பினல் கோட்	3	0
எவிடன்ஸ் (சாட்சி) ஆக்ட்	1	0
ஹிந்து தர்ம ஸ்தாபன (தேவஸ்தான) சட்டம்	1	0
டிரஸ்ட்டி ஆக்ட்	0	12
நில ஆக்கிரமிப்பு சட்டம்	0	4
கால நிர்ணய ஆக்ட்	0	8
புதிய ஸ்டாம்பு ஆக்ட்	0	12
புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட்	1	0
புது இன்கம்டாக்ஸ் சட்டம்	1	0
பெரிய மகம்மதியன் லா	2	0
எஸ்டேட் ஜமீன்குடி நில சட்டம்	1	4

கிடைக்குமிடம்:—

V. S. T. Sawmy & Co.,

VEPERY, MADRAS.

ஏஜண்டுகள் தேவை

சமுத்திர லெவலுக்கு எவ்வளவு உயரத்தில் தேயிலைகள் உற்பத்தி ஆகுமோ அவ்வளவு, மணம், குணம் வாசனை உள்ளதாகவும் நல்ல டிக்காஷன் மற்ற தேயிலைகளைவிட அதிக கலர் உள்ளதாகவும் இருக்கும். நம்முடைய எஸ்டேட்டில் உற்பத்தி ஆகும் தேயிலைகள் சுமார் 7000-7500 அடி சமுத்திர மட்டத்திற்கு மேல் உற்பத்தி ஆனது. திருவனந்தபுரம் எஸ்டேட்கள் உயரம் 3500-4000 அடிதான். நீலகிரி டார்ஜலிங் மலைகளுக்கள் எஸ்டேட் மேல் கண்ட உயரம், தவிர தற்சமயம் மார்க்கட்டில் மட்டம் விலையில் விற்கும் டீ இலைகள் கலப்புள்ளது. ஆகையால் மலிவான விலைக்கு கிடைக்கிறபடியால் அசல் தேயிலைகள் உற்பத்தி செய்வோர்க்கு இது தீங்கை விளைக்கிறது போலி சரக்கை வாங்கி ஏமாறாதீர்கள். இது விஷயத்தில் மந்திரி மார்களும் தகுந்த சிரத்தை எடுத்து கொள்வார்கள் என்று கேட்டு கொள்கிறோம். நம்முடைய கம்பெனியின் பலரக உயர்தர தேயிலைகள் ஸ்டாக் செய்து விற்பனை செய்ய செல்வாக்குள்ள ஏஜண்டுகள் சென்னை ராஜதானியை சேர்ந்த ஒவ்வொரு டவுனுக்கும் தாலுக்காகளுக்கும், ஜில்லாக்களுக்கும் தேவை. தற்சமயம் மதுவிலக்கு உள்ள எல்லா இடங்களுக்கும் நமுடைய கம்பெனியார் மேலான டீ ரகங்கள், டஸ்ட் இனம் லூஸாக 25-50 Lbs பெட்டி. பிரீடெலவரி 0-7-0 டீ Lbs பாகிட் 0-8-0 ரெட் விவரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

ALL INDIA TRADING CO.

17-20 V. V. Koil St

Periamet, Madras.

சீனர் வெற்றி

ஜப்பானியர் ஓட்டம் :: :: :: ஷியாங்-கே-ஷேக் உறுதி

சீன-ஜப்பான் யுத்தம் ஆரம்பித்து 15 மாதங்களாகின்றன. ஜப்பானியர் வெற்றி மேல் வெற்றி பெற்று வருகிறார்கள் சுமார் 3 மாதங்களுக்கு முன் சீனருக்குப் பல வெற்றிகள் கிடைத்தன. சீனர் வெற்றிபெற்று வந்த தீவிரத்தைக் கவனித்தால், ஜப்பானியர், சீனவிலிருந்து மூட்டை கட்டி விடுவார்களோ வென்ற சந்தேகம் கூட ஏற்பட்டது. ஷியாங்-கே-ஷேக்குடன் சமாசஞ் செய்துகொள்ள ஜப்பானியர் விரும்பினர்கள். ஆனால், ஷியாங்-கே-ஷேக் சமரசத்துக்குச் சம்மதிக்கவில்லை ஜப்பானியர், சீனவிலிருந்து அடியோடு காலியானபின்தான் சமரசப் பேச்சைப்பற்றிப் பேச முடியுமென்றார். ஆனால், ஜப்பானியர் திடீரென போராட்டத்தில் விசேஷ சிரத்தை காட்டினார்கள். ஜப்பானியருக்குப் பல வெற்றிகள் கிடைத்தன. சீனர்கள் தலை நகரங்களை விட்டு ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டது எனினும் சீனர் மனந்தளரவில்லை ஜப்பானியரை எப்படியும் முறியடித்து ஜெயம் பெறுவோமென்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதே உறுதிதான் ஷியாங்-கே-ஷேக்கிடமும் இருக்கிறது.

யுத்த ஏற்பாடுகள்

ஜப்பானியர் வெற்றி பெற்று வந்தபோதிலும், அவர்கள் ஜெயிக்க வேண்டிய பிரதேசங்கள் இன்னும் பல உண்டு. ஜப்பானியரை எதிர்த்து நீடித்த போராட்டத்தை நடத்த ஷியாங்-கே-ஷேக் தயாராக இருக்கிறார். ஹூனான் மாகாணத்தில் அடுத்த பெரிய யுத்தம் நடக்குமெனத் தெரிகிறது. யுத்தத்துக்கு வேண்டிய சப்ளைகளையும், துருப்புகளையும் அவர் சேகரித்துத் தயாராக வைத்திருக்கிறார். அவரிடமிருக்கும் ராணுவங்களைக் கொண்டு, ஜப்பானியரை முறியடிக்க முடியுமென்ற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது.

சீனர் வெற்றி

தெற்கு சீனவில் ஜப்பானியரைச் சீனத் துருப்புகள் பலமாய் எதிர்த்துத் தாக்கி வருகின்றன அதி சீக்கிரத்தில் காண்டன் சீனர் கைக்கு வந்து விடும். காண்டன் நகரைப் பிடிக்கச் சீன சைன்யங்கள் பல திசைகளிலும் காண்டனை நோக்கி நெருங்கி வருகின்றன. ஜப்பானியர் சீனரை எதிர்த்து நிற்க முடியாமல் சிற்சில இடங்களில் ஓட்டமெடுத்தன. ஜப்பானியர் ஜெயித்திருக்கும் பிரதேசங்களிலும் அவர்கள் நிம்மதியாக இல்லை. சீனக் குரங்குச் சண்டை வீரர்கள் திடீரென ஜப்பானியரை எதிர்த்து, அவர்களை சிதைத்து வருகின்றனர் லீயூபாங் என்றவிடத்தில் 18 ஜப்பானிய விமானங்கள் பறந்து சென்று வெடிகுண்டுகளை எறிந்தன. அதனால் மாண்டவர்களும், காயமடைந்தவர்களும் ஒரு ஆயிரம் இருக்கும். காண்டனுக்கு அருகிலுள்ள போக்லோ என்ற இடத்தைச் சீனர் கைப்பற்றி விட்டார்கள்.

சீனர் வெற்றி

காண்டன் நகரை நோக்கி நாலா பக்கமும் வந்த சீனத் துருப்புகள் காண்டன் நகரை நெருங்கிவிட்டன அங்கு மும்முரமான போராட்டம் நடந்து வருகிறது. காண்டன் நகரைப் பாதுகாத்து வந்த ஜப்பான் துருப்புகளை, சீனத் துருப்புகள் முறியடித்து, நகருக்கு வெளியாகவே துரத்திவிட்டன. ஜப்பான் துருப்புகள் சீனரை எதிர்த்து நிற்க முடியாமல் பின் வாங்கிவிட்டனர். காண்டனுக்கு வடக்கே ஷாண்டுங் மாகாணத்திலுள்ள டாயிங்ஸ், வாங் என்ற இரு முக்கியமான இடங்களை சீனர் இரண்டாம் முறையாக ஜப்பானிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார்கள். யீலின் என்ற மற்றொரு இடமும் சீனர் வசமாகிறது. காண்டனுக்குக் கிழக்கே 8 மைல் தூரத்திலுள்ள வெய்லோ என்ற பெரிய நகரத்தையும் வடக்கே 8 மைல் தூரத்திலுள்ள டாம்ஷுயா என்றவிடத்தையும் ஜப்பானியரிடமிருந்து சீனர் பிடித்து விட்டார்கள். காண்டன்-ஹெனான் ரயில்வேயைப் பல இடங்களிலும் வெட்டி விட்டனர் 40 யுத்தக் கப்பல்களில் ஜப்பானியர் புதுத் துருப்புகளை இந்த போர் முனைக்கு அனுப்பினார்கள் ஆனால், அவர்களை சீனத் துருப்புகள் அதஞ் செய்து விட்டன. நான்சாங்காவுக்கும் யோசவுக்கு மிடையே சீனர் தோல்வியடைந்து வேகமாகப் பின் வாங்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் ஷியாங்-கே-ஷேக் கூறியபடி இந்த வாரத்துக்குள் காண்டன் சீனா கைவசமாகி விடலாம். சீனர் வெற்றியில் உறுதி கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியரோ, அவர்கள் வெற்றியில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் யாருக்கு வெற்றி தோல்வி கிடைக்குமென்று தெரியவில்லை.

டிராலியின் கமகமவென பரிமளிக்கும்

கஸ்தூரி சோப்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்

52, பந்தர் தெரு, மதராஸ்.

பிராஞ்சு—மதுரை

ஒரே மணியில் யௌவனம்! வீரியத்தைப்பெற காமபிந்து (ரிஜிஸ்டர்டு)வை உபயோகியுங்கள். 30 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ. 2-8-0. டாக்டர். என். வி. ஆர். கோபாலன். எம். டி. & (எச்) நெ. 7, தணிகாசலம் பிள்ளை தெரு, திருவெல்லிக்கேணி, சென்னை.

மதயானைக் குளிகை

தண்ணீர்போல உடைந்து நீற்றுப்போகும் இந்திரியத்தை இறுக்கிக் கட்டி, மணியாக்கி, நாடி நரம்புகளை முறுக்கேற்றி, இகலற இன்பத்தில் மதங்கொண்ட யானையைப்போல் அடக்க முடியாத அபார ஊக்கத்தைக் கொடுத்து நீண்ட நேரம் சுகம் அனுபவிக்கலாம். இதன் ரகசியம் அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இப்படியும் ஒரு தாதுபுஷ்டி குளிகை உண்டா? என்று பிரமித்து விடுவார்கள். 50 குளிகை ரூ 5. (25 குளிகை ரூ. 3.)

விலாசம்:—கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி, S. I. R.

தமிழ் மணி

சென்னை—வெகுதானியஹு கார்த்திகைமீ 5உ (20 11 1938)

ஆவேச அவதாரம்!

கள் குடித்து, வெறி பிடித்த குரங்கைை, தேள் ஒன்றும் கொட்டிவிட்டால் அந்தக் குரங்கின் ஆவேசத்தைக் கேட்கவும் வேண்டுமோ? இன்று, ஹிட்லர் அதே ஆவேச அவதாரம் எடுத்து விளங்குகிறார். மத்திய ஐரோப்பாவில் வெறும் மிரட்டலால், பல பிரதேசங்களை ஜெயித்த வெறி ஹிட்லர் தலைக்கேறி இருக்கிறது. இந்த வெறியால் உருண்ட ஹிட்லர், பிரிட்டனையும், பிரான்சையும் மீண்டும் உருட்டினர். ஜெர்மனி இழந்த காலனிகளைத் திருப்பக் கொடுக்கும்படி கேட்டார். இன்றேல் யுத்தஞ்செய்தாவது, அந்தக் காலனிகளைத் திரும்பப் பெற்றே தீருவோமென்று மிரட்டினர். பிரிட்டனும், பிரான்சும் வெலவெலத்துப் போயின. ஹிட்லருக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியாமல் விழித்தனர். பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேனுக்கு - முனிச் துரோக விராதி வீரருக்குக் காலனிகளைப்பற்றிய பேச்செடுக்கவே முடியவில்லை. ஜெர்மன் காலனி வேண்டுமென்றால் அவர் காவரண்டுபோய், பேசக்கூடச் சக்தியற்று விளங்கினர்; ஆனால், எப்படியோ அவருக்குப் புதுவீரம் பிறந்துவிட்டது. ஜெர்மன் காலனிகளைக் கொடுக்க முடியாது; அதைப்பற்றிய பேச்சே வேண்டாமென்று கூறிவிட்டார். தென் மேற்கு ஆப்ரிக்கா, தங்கனிகா முதலிய சர்க்காருக்கு அவருடைய தீர்மானத்தைத் தெரிவித்துவிட்டார். தென்மேற்கு ஆப்ரிக்கா சர்க்காருக்குச் சேம்பர்லேன் பேச்சில் நம்பிக்கை இல்லை. ஏன்? ஜெக்கோவுக்கு உதவிச் செய்வதாகக் கூறி பின்னும், அதை நடுத்தெரு நாராயணவென்று விட்ட சேம்பர்லேன் வார்த்தையில் யாருக்குத்தான் நம்பிக்கை வரும். என்றாலும், பிரிட்டிஷ் முதன் மந்திரி என்ற ஹோதாவில் அறிக்கை வந்திருக்கிறது; தென்னாப்ரிக்கா சர்க்கார் அந்த அறிக்கையை நம்பினார்கள்.

வாலாட்டுகிறது

ஹிட்லரிடமும், முஸோலினியிடமும் பதுங்கிக் கிடந்த கிழச் சிங்கம், பற்களை இழந்த பிரிட்டிஷ் சிங்கம் மெதுவாக வாலை ஆட்டுகிறது; பழைய வீரத்தை நினைத்து உறுமிப் பார்க்கிறது. காலனிகளைக் கொடுக்க முடியாதென்று தெளிவாகக் கூறிவிட்டது. கிழச் சிங்கம் இப்படி உறுமுமென்று ஹிட்லர் எதிர்பார்க்கவில்லை; பிரிட்டனுடன் சேர்ந்து, பிரான்சும் காலனிகளைக் கொடுக்க முடியாதென்று கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டது. அதிகார மமதை கொண்ட ஹிட்லருக்கு இதைச் சகிக்க முடியவில்லை.

கஷ்ட காலம்

சனியன் போல் இச் சந்தர்ப்பத்தில் ஒரு யூத வாலிபன் வான்ராத் என்னும் ஜெர்மானியனைப் பாரிசில் சுட்டுக்கொன்றான்; அவ்வளவுதான். ஹிட்லர் ஆவேசம் பொங்கிவிட்டது. ஜெர்மனியிலுள்ள யூதர் கருவையே அழித்துவிடத் தீர்மானித்து விட்டார் யூதர்களைச் செய்த நிஷ்டூரஞ் சொல்லி முடியாது. ஆவேசத்தால் தூண்டப்பட்ட ஒரு இளைஞனின் முட்டாள் செயலுக்காகப் பல ஆயிரக்கணக்கான யூதர்கள் கஷ்டப்பட நேர்ந்தது. பலர் கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டார்களாம். யூதர்களின் கடைகளிலும், வீடுகளிலும் ஜெர்மனியர் கொள்ளையிட்டனர் பல ஆயிரக்கணக்கானவர் கைதிகளாகி சிறையில் அடைக்கப்பட்டனர். ஜெர்மனியிலுள்ள எல்லா யூதர்களின் சொத்தின் மதிப்பில் 10ல் ஒரு பங்கை, அதாவது, 1000 கோடிமார்க்குகளை யூதர்கள் அபராதமாகக் கொடுக்கும்படி அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வருகிறார்கள் ஹிட்லர் ஆவேசமும், அட்டூழியங்களும், ஜெர்மனியருக்கே பிடிக்கவில்லையென்றால், பிறரைப்பற்றிக் கேட்பானேன? அமெரிக்கா, ஹிட்லரின் போக்கைப் பலமாகக் கண்டித்திருக்கிறது பிரிட்டன் கூட ஹிட்லர் செயலை மிருகத்தனமானதெனக் கண்டித்திருக்கிறது. ஹிட்லர், அதிகார வெறிபிடித்த ஹிட்லர் இதைப் பொருட்படுத்தவில்லை. ஆசை வெட்கமறியுமா? பதவி ஆசையும், அதிகார வெறியும் பிடித்த ஹிட்லர் பிறதேசக் கண்டனங்களை அலட்சியமாக மதித்து வருகிறார். பிரிட்டனையே கிண்டல் செய்யப் புறப்பட்டுவிட்டார். பிரிட்டன் பாலஸ்தீனத்தில் மிக ஒழுங்காக நடந்துகொள்ளுகிறதோ வென்று கேட்டார். மெய்தான்! பிரிட்டன் அடக்குமுறையில் கைதேர்ந்ததுதான்; என்றாலும், இவ்வளவு நிர்தமாய் இறங்குவதில்லை அதிலும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இவ்வாறு பேய்த்தனமான செயலில் இறங்கிய சாவாதிகாரிகளையோ, மன்னர்களையோ, மந்திரிகளையோ, யாரும் கண்டிருக்கமாட்டார்கள். ஹிட்லர் அட்டூழியம் அவ்வளவுக்கு இழிவான முறையில் போய்விட்டது. உலக கண்டனங்களைக் கண்டாவது ஹிட்லருக்குப் புத்தி வருமென்று எதிர்பார்க்கிறோம். அவருடைய ஆவேசத்தை மட்டுப் படுத்தி, நிதான 'புத்தியுடன் நடந்து கொள்ளுவாராக. இன்றேல், ஜெர்மனிக்கு இது பெரிய கேவலமாகும் ஜெர்மனிக்கு மட்டுமல்ல, மேனாட்டின் நாகரிகத்தில் பெருமைகொள்ளும் ஐரோப்பியர் அனைவருக்குமே இது கேவலமென்பதில் சந்தேகமில்லை.

புது நட்பு!

ஜெக்கோவைப் பலி கொடுத்துப் பிரிட்டன் ஜெர்மனியின் நட்பைத் தேடிக்கொண்டது. ஆனல், அந்த ஜெர்மன் நட்பு அவ்வளவு ஆழமாக வேர் ஊன்றவில்லை. வேர் ஓடுவதற்குமுன் ஹிட்லர் அதை மூளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டார். காலனிகளைக் கேட்டதுதான், அந்த ஜெர்மன் நட்பு, அல்லது அச்சு முறிவதற்குக் காரணம். ஜெர்மனி நட்பு முறிந்ததும், பிரிட்டன் இதாலி நட்பைப் பலப்படுத்த எண்ணியது. ஜெர்மன் நட்பைப் பெற எப்படி ஜெக்கோவைத் தத்தஞ் செய்யப் பிரிட்டன் சம்மதித்ததோ, அப்படியே இதாலி நட்பைப்பெறப் பிரிட்டன் ஸ்பெய்னைப் பலி கொடுக்கத் தயாராக இருந்தது. எதற்காக? மத்தியதரக் கடலில், இதாலியால் பிரிட்டனுக்கு ஆபத்துவரக்கூடாது என்பதற்காகத்தான். அந்த ஒரே சுயநல நோக்கத்துடன், பிரிட்டன் இதாலியுடனும் நட்புக்கொண்டிருக்கின்றன. இந்த நட்பைப்பற்றி இதாலியிலும், பிரிட்டனிலும் பிரமாதமாகப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். ஆனல் பின்னல் ஏற்படப்போகும அனர்த்தங்கள் பல உண்டு.

ஸ்பெய்னுக்கு ஆபத்து

பிரிட்டன, இதாலி நட்பு ஸ்பெய்னுக்குச் சனி. இந்த சம்பந்தப்படி, ஸ்பெய்னிலுள்ள இதாலி ராணுவங்களையும, ராணுவ உத்தியோகஸ்தர்களையும இதாலி வாபஸ் வாங்கவேண்டும். இதாலி அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை பெயரளவில் ஒன்றுக்கும் உதவாத சுமார் 10000 இதாலி ராணுவங்களை ஸ்பெய்னிலிருந்து திருப்பி அழைத்துக்கொண்டார்கள் ஆனல் இன்னமும் ஏராளமான இதாலி, ஜெர்மன ராணுவங்கள் ஸ்பெய்னிலிருக்கின்றனா. அந்த ராணுவங்கள முழுவதையும் வாபஸ் பெறுமலேயே, பிரிட்டனும், இதாலியும நட்புக்கொண்டு, வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டன. இது ஸ்பெய்ன கலகக்காரர் கைப்பற்றிய மாதிரிதான்; ஸ்பெய்ன் இனிமேல் கலகக்காரர் கைவசமாவது நிச்சயம். ஸ்பெய்ன் கலகக்காரர் கைவசமாகி அங்கு பாஸிஸ்ட் தேசங்களின் ஆதிக்கம் ஏற்பட்டு விட்டால் பிரான்சுக்கு ஆபத்து. அதற்கு நான்கு திக்கிலும் இடி விழுவது நிச்சயம். பிரிட்டனும் தப்பிவிடாது. இன்று ஜெக்கோவைக்கொடுத்துவிட்டு ஹிட்லரிடம் எப்படி பிரிட்டன் தொங்குகிறதோ, அதேபோல் இனிமேல முஸோலினியிடம் தொங்க வேண்டியதுதான். மத்தியதரக்கடலில் இதாலி பூர்ண ஆதிக்கம் செலுத்தும். பிரிட்டன் "ஆப்பதனை பிடுங்கிய குரங்குபோல்" அகப்பட்டு உழலவேண்டியதுதான். பிரிட்டன், இதாலி நட்பு இந்த முடிவுக்கே வந்து சேருமென்பதில் சந்தேகம் வேண்டாம்.

கொள்ளா? கொண்டுவா!

கொள்ளென்றால் வாய்திறப்பதும் கடிவாளமென்றால் வாயை மூடிக்கொள்ளுவதும் செம்பேறிக் குதிரைகள் வழக்கம். இந்த வழக்கம் மனிதருக்குமுண்டு. லாபமென்றால் வாய் திறப்பார்கள். லாபத்தில் ஒரு பங்குகொடு என்றால் வாயை மூடிக்கொள்ளுவார்கள். இந்தியாவுக்கு வரும் வெள்ளையர், இந்தியாவில் வர்த்தகஞ்செய்து, கொள்ளை கொள்ளையாக லாபந் தேடுகிறார்கள். அந்த லாபத்தில் ஒரு பங்கை இந்தியாவுக்கு வருமானவரியாகக் கொடுப்பதென்றால், அவர்களுக்குக்கஷ்டமாக இருக்கிறது. இந்தியாவுக்கு வெள்ளையர் வருமான வரிகொடுப்பது நியாயமில்லையென்று நியாயமற்ற வாக்குவாதம் செய்கிறார்கள். இந்தியாவில் கொள்ளையடிக்கும் லாபத்தில் ஒரு சிறு பங்கைக் கொடுக்க வெள்ளையர் வயிறு எரியுமேயானல், அவர்கள் இந்தியாவுக்கு வரவேண்டியதில்லை. பிரிட்டனிலேயே இருந்துகொள்ளலாம். இந்தியா அவர்களிடம் ஒரு தம்பிடி கூடக் கேட்கமாட்டார்கள்.

சர்க்கார் சலுகை

இந்திய சட்டசபையில் புதிய வருமானவரி மசோதா விவாதத்திற்கு வந்தது. அந்த மசோதாவில் 49வது விதி வெள்ளையருக்கு விசேஷ சலுகை கொடுக்கிறது இதை அசெம்பிளிமெம்பர்கள் எதிர்த்தும், நிதி மந்திரி ஜேம்ஸ் கிரிக் வெகு தளுக்காகப்பேசி, வெள்ளையர் சலுகையை ஊர்ஜிதப்படுத்த முயற்சித்தார். அவர் முயற்சி பயன் படவில்லை. முஸ்லிம் லீக் அங்கத்தினரும், காங்கிரஸ் மெம்பர்களும் அந்த சலுகைகளை அடியோடு தொலைத்துவிட்டார்கள். இந்திய சர்க்கார் இதில் படுதோல்வியடைந்தது. ஆனல், அசெம்பிளி நிராகரித்த அந்த சலுகைகளை இந்திய சர்க்கார் நிறுத்திவிடுவார்களா? சந்தேகந்தான். வைசிராய் பிரபுவின் கையில் விசேஷ அதிகாரம் இருக்கிறது நிராகரிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் தலைகாட்டலாம். ஆனல், வெள்ளையருக்குக் கொடுக்கும் இந்தச் சலுகைளால் இந்திய சர்க்காருக்குச் சுமார் 1 கோடியே 20 லக்ஷம் ரூபாய் நஷ்டமேற்படுகிறதென்பதை வைசிராய் பிரபு மறந்துவிடக்கூடாது. இது இந்தியாவுக்குச் செய்யும் அநீதிகளில் பெரிய அநீதியாகும்.

சென்னையில் தொல்லை

சென்னையில் சகிக்கமுடியாத தொல்லை எது தெரியுமா? பிச்சைக்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

காரர் தொல்லை. சென்னை நகரிலிருக்கும் பிச்சைக்காரரைப்போல் உலகில் வேறு எந்த நகரிலும் பார்க்க முடியாது. வீட்டைவிட்டு வெளியேறினால் இவர்கள் தொல்லைதான். காபி ஹோட்டல்களிலும், ரோடுகளிலும், டிராம், பஸ், ரயில்வே ஸ்டேஷன்களிலும் இவர்கள் கூட்டத்தைக் காணலாம். இவர்கள் ரீங்காரந்தான் சதா காதில் சப்தித்துக்கொண்டே யிருக்கும். இந்தப் பிச்சைக்காரர்களில் பலர் வேலை செய்து பிழைக்கக்கூடியவர்கள். என்றாலும், பிச்சை யெடுத்துச் சொகுசு கண்டுவிட்டதால் அவர்கள் தேகம் வேலைசெய்ய இடங்கொடுப்பதில்லை. இந்தப் பிச்சைக்காரர் தொல்லையை ஒழிக்கச் சர்க்காரும், சென்னைக் கார்ப்பொரேஷனும், தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

தொத்து நோய்

வேலை செய்து பிழைக்கக்கூடிய பிச்சைக்காரருக்கு ராயபுரத்தில் ஒரு கைத் தொழிற்சாலை அமைக்கக் கார்ப்பொரேஷன் முயற்சியெடுத்து வருவதாக அறிகிறோம். கார்ப்பொரேஷனுக்குச் சர்க்கார் உதவியும் அவசியமாகும். போலீஸ் அதிகாரிகளின் உதவியும் அத்யாவசியம் தேவை. பிச்சைக்காரர்கள் தெருக்களில் நின்று பொதுஜனங்களுக்கு உபத்ரவம் கொடுக்காமல் பாதுகாக்க வேண்டியது போலீஸ் அதிகாரிகளின் கடமை. பிச்சைக்காரருடன் கலந்திருப்பவர்கள் தொத்து நோய் பிடித்த பிச்சைக்காரர்கள். இவர்களுக்கென்று தனி இடம் கொடுத்து இவர்களையும், பராமரிக்க வேண்டியது சர்க்கார் கடமை தொத்துநோய் பரவாமலும், நோய் பிடித்தவர்களை வெளியில் அனுமதிக்காமலும், அவர்களை ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை செய்து வருவது நல்லது இவ்வித சட்டமொன்று இருந்தும், அசிரத்தையால், பல தொத்து நோய்க்காரர் தெருக்களில் நடந்து திரிந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் கேடுகள் பல உண்டு சென்னை நகரத்துக்கே இதனால் மதிப்புக் குறைவு ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. பிச்சைக்காரர் தொல்லையையும், தொத்து நோய் பிடித்தவர்கள் அபாயங்களையும் போக்கிச் சென்னை நகரைப் பரிசுத்தப் படுத்தக் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் உடனே தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களாக. கார்ப்பொரேஷன் அதிகாரிகள் காலங்கடத்திக்கொண்டு போவது கூடாது கார்ப்பொரேஷன் அதில் போதிய சிரத்தை எடுத்துக்கொள்ளாவிடில், சென்னை மக்கள் கிளர்ச்சி செய்து இந்தத் தொல்லைகளைப் போக்க வேலை செய்ய வேண்டும். சென்னை மக்களின் கிளர்ச்சி எவ்வளவு தீவிரமாக இருக்கிறதோ, அவ்வளவுக்குக் கார்ப்பொரேஷனும் சர்க்காரும் சுறுசுறுப்பாக வேலை செய்யும். சென்னையைப் பிடித்த தொல்லைகளும் சீக்கிரத்தில் தொலையும்.

மணியோசை

பண்டித ஜவார்லால்,
பம்பாய்.

தேசிய சிங்கமே!

வருக; நீங்களும் உங்கள் குமாரத்தியும், சுகமே தாய் நாடு வந்து சேர்ந்ததற்குச் சந்தோஷமடைகிறேன். நீங்கள் ஐரோப்பாவுக்குத் தமாஷ் யாத்திரை போகவில்லை. ஐரோப்பாவின் நிலைமையை நேரில் கண்டறியவே சென்றீர்களென்பது எனக்குத் தெரியும். நீங்கள் ஐரோப்பா சென்றதால் இந்தியரின் மதிப்பும் உயர்ந்திருக்கிறதென்பதை இந்திய மக்கள் அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். தேசிய இந்தியாவுக்கு ஐரோப்பாவில் நல்ல மதிப்பு ஏற்பட்டிருப்பதாக நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அந்த மதிப்புக்குக் காந்திஜியும், நீங்களும் இதர தேசியத் தலைவர்களுமே காரணம். மிதவாத முண்டங்கள் அல்ல; அல்லது, ஜஸ்டிஸ் கட்சித் துரைக்கைகளுமல்ல சுயமரியாதை வீராதி வீரப் புலிகளுமல்ல. விமானப்படை, ராணுவம், கடற்படை, பீரங்கி, குண்டு முதலிய யுத்த தளவாடங்களை ஏராளமாக வைத்திருக்கும், பிரிட்டிஷாரிடம் வெறுங் கைக் காங்கிரஸ்காரரால் என்ன சாதித்துவிட முடியுமென்று அநேகர் கேட்கிறார்கள். காங்கிரஸ் என்ன சாதித்திருக்கிறதென்பதை அவர்களே கண்ணால் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும். சத்தியாக்கிரகத்துக்கு முன் பீரங்கி, வெடிகுண்டு, துப்பாக்கிகளெல்லாம் வெறும் களி மண் கட்டிகள்தான். பிரிட்டனை, இந்தியர் மடக்க முடியும்; மடக்கி வெற்றிபெற முடியுமென்ற தைரியம் இந்தியருக்கு ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா தலை தூக்க முடியும். சுதந்திரப்போரை வெற்றிகரமாக நடத்த முடியும். அதற்கு உங்கள் சேவையும், வீரத்தை அள்ளியூட்டும் உபதேசங்களும் யென்றும் பயன்படுமென்று நம்புகிறேன்.

டிங்—டாங்

எஸ். ராமநாதன்,
சென்னை

விளம்பர மந்திரியே,

சென்னை ஹரிஜனங்கள் கூட்டமொன்றில் நீங்கள் பேசியபோது, மகாத்மா காந்தி ஒருவரே ஹரிஜனங்களின் உற்ற நண்பர். அவரை நம்புங்கள். அவர் உங்களுக்கு எல்லா நன்மைகளும் தேடிக் கொடுப்பாரென்று நீங்கள் காந்திஜி பெயரை எடுத்துப் பாடினீர்கள். காந்திஜி ஹரிஜனங்களுக்கு அவருடைய உயிரையே அர்ப்பணஞ் செய்துவிட்டார். அது எல்லோருக்கும் தெரியும். ஆனால், காந்திஜியின் தயவால் காங்கிரஸ் பேரால் மந்திரி பதவி வகிக்கும் காங்கிரஸ் மந்திரிகள் என்ன செய்திருக்கிறார்கள், என்ன செய்யப்போகிறார்களென்பதே கேள்வி. காங்கிரஸ் மந்திரிகள் செய்யப் போகும் நன்மைகளை ஹரிஜனங்களுக்கு எடுத்துக் கூறுங்கள்; காந்திஜியின் பெயரை இழுத்துக் காலங்கடத்த வேண்டாம்.

டிங்—டாங்

வி. ஐ. முனுசாமிப்பிள்ளை,
சென்னை.

ஹரிஜன் மந்திரியே,

ஹரிஜனங்களுக்குக் காங்கிரஸ் செய்திருக்கும் நன்மைகளை எடுத்துக் காட்டி, அவர்களைக் காங்கிரசில் சேரும்படி தூண்ட நீங்கள்தான் சரியான பேர்வழி. ஏனெனில், நீங்களும் ஒரு ஹரிஜன். சாதாரண நிலைமையிலிருந்து ஒரு மந்திரி பதவிக்கு உயர்ந்தவர்கள். ஆனால், மந்திரியாகி விட்டோம் என்ற பெருமித எண்ணம் வேண்டாம். ஹரிஜனுக்கு ஹரிஜனாய், ஹரிஜன மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டியதே உங்கள் கடமை என்பதை மறந்துவிட வேண்டாம். சென்னை காங்கிரஸ் சர்க்கார் சுமார் 4000 ஏக்கர் நிலத்தை ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். 14 லக்ஷம் ரூபாய் ஹரிஜனங்கள் அபிவிருத்திக்காக ஒதுக்கி வைத்திருக்கின்றனர் பல உயர்தர உத்தியோகங்களைக் காங்கிரஸ் மந்திரிகள் ஹரிஜனக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் பதவியேற்ற இந்தச் சொற்பக் காலத்தில் இவ்வளவு நன்மை செய்திருக்கின்றன. ஆதலால் காங்கிரஸ் ஒன்றே ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடியதென்று நீங்கள் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறியதைப் பாராட்டுகிறேன். ஹரிஜனங்கள், வெறும் ஆர்ப்பாட்டங்களையும், வாய் வீச்சு வீரங்களையும் நம்பி மோசம் போகக்கூடாதென்பதே எனது கோரிக்கை. இதை நீங்களும் ஹரிஜன மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டீர்கள். சில ஹரிஜன மக்களுக்கு இனிமேலாவது காங்கிரஸ்மீது நம்பிக்கை ஏற்படுமென்று நம்புகிறேன். அந்த நம்பிக்கை ஏற்படா விட்டால், அதின் பலா பலனை அவர்கள் அனுபவிப்பது நிச்சயம். வீண் படாடோபம் செய்கிறவர்களை நம்பி அவர்கள் மோசம் போக வேண்டியதுதான்.

டிங்—டாங்

டாக்டர் பட்டாபி சீதாராமய்யா,
பம்பாய்.

ஆந்திர தலைவரே,

நீங்கள் அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் காங்கிரஸ் தலைவர். அதையொட்டி பம்பாய் சென்றிருக்கிறீர்கள். நிஜாமில் ஏற்பட்டிருக்கும் பொறுப்பாட்சிப் போராட்டத்தை நிஜாம் சர்க்காரால் சமாளிக்க முடியாமல், உங்களைக் கலந்து ஆலோசித்து, ஓர் சமரசஞ் செய்ய உங்களுக்கு அழைப்பு வந்ததாகக் கேள்விப் பட்டேன்; ஆனால், நீங்களோ அதைப் பற்றி ஒன்றும் கூறாமல் பம்பாய்க்கு நிஜாம் வழியாகச் சென்றீர்கள். உங்களுக்கு மற்றொரு அழைப்பு வந்தது; நிஜாமுக்குள் நீங்கள் பிரவேசிக்கக் கூடாது; பிரவேசித்தால், நிஜாம் சர்க்கார் விருந்தினராகச் சிறை செல்லவேண்டுமென்ற அழைப்புதான். இதை ஒரு சப்இன்ஸ்பெக்டர் உங்களிடம் தெரிவித்தார் நீங்கள் என்ன சொன்னீர்கள். "பம்பாய்க்கு எப்படியும் நிஜாம் வழியாகத்தான் போகவேண்டும். புறப்பட்டாய் விட்டது; இனிமேல் திரும்பப் போவதில்லை" என்று அழுத்தமாகக் கூறி விட்டீர்கள். நிஜாம் சர்க்கார் அழைப்பையும் ஏற்றுக் கொண்டீர்கள். உங்களை அழைக்க வந்த சப்இன்ஸ்பெக்டருக்கு சரியான மூளை இல்லை. பேசாமல், உங்களை அழையாமலே திரும்பிப் போய் விட்டார். இதுதான் நிஜாம் அழைப்புப் போலும்! இதிலிருந்து நிஜாம் சர்க்காரின் அடக்குமுறை வெறியைத் தெரிந்து கொள்ளலாம். உங்களையும் நிஜாம் சர்க்கார் ஒரு விருந்தினராக ஏற்றுக் கொண்டிருந்தால் நிலைமை நன்றாக இருந்திருக்கும். அந்தப் பாக்யம் உங்களுக்கும், நிஜாம் மக்களுக்கும் கொடுத்து வைக்கவில்லை; இது யார் செய்த பாவமோ தெரியவில்லை!

டிங்—டாங்

பொப்லி ராஜா,
பொப்லி

ராஜா சாஹேப்,

ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து மட்டுமல்ல, அந்தக் கட்சியிலிருந்தே விலகி விட்டதாக உங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தீர்களென்று நினைக்கிறேன். ஆனால், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களோ நீங்கள் அந்தக் கட்சியிலிருப்பது போலவும், தலைவர் பதவியில் இல்லாது போயினும், கட்சிக்காகத் தீவிரமாக உழைக்கப் போவது போலவும், பேசியும் எழுதியும் வருகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் கூறுவது உண்மையா, நீங்கள் கூறியது உண்மையா? எது உண்மையென்று தயவு செய்து தெளிவுபடுத்துவீர்களா?

டிங்—டாங்

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்,
ஈரோடு.

மிக மிகப் பெரியாரே!!

வரவேணும்; உங்களுக்குப் பெரியார் என்னும் பட்டம் கிடைத்ததற்குச் சந்தோஷம். அந்தப் பட்டமும், தமிழ்த் தாய்மார்கள் மகாநாட்டில் கிடைத்தது இன்னமும் விசேஷமாகும். அந்தத் தாய்மார் உங்களைப் பெரியார் என்று மட்டும் அழைக்கும்படி தீர்மானித்தார்கள். நானோ உங்களை மிக மிகப் பெரியார்-இன்னமும் வேண்டுமானால் எத்தனை மிக மிகவும் சேர்த்து அழைக்கச் சித்தமாயிருக்கிறேன். இப்பொழுது உங்களுக்குப் பண ஆசையும், தலைவர் பதவி பித்தும்தான் மண்டைக்கேறி யிருக்கிறது. பொப்லி ராஜா ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து விலகியதும், அந்தக் கட்சிக்குத் தலைவர் பதவி கிடைக்காதாவென்று நீங்கள் வாய் பிளந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா? உண்மையானால், அந்தப் பதவிக்கு நீங்கள் எந்த வகையில் லாயக்குடையவர்கள்? உங்கள் மனதில் கை வைத்துக் கூறுங்கள் பார்ப்போம். பணத்திலா, படிப்பிலா, ஒழுக்கத்திலா, அல்லது, ராஜ தந்திரத்திலா? எதில்தான் நீங்கள் ஒரு தலைவர் பதவிக்குத் தகுதியுடையவர்களென்று கேட்கிறேன். அல்லது, நீங்கள் தோற்றுவித்த இயக்கம் எதுக்குத்தான் உதவப்பட்டது? சற்று விளக்கமாகத் தெரிவிப்பீர்களா?

டிங்—டாங்

சர். பன்னீர் செல்வம்,
தஞ்சை,

சு. ம. சிறிங்குவரே!

உங்களுக்கு சதாகாலமும் காங்கிரஸ் மந்திரிகள் சிம்ம சொப்பனமாக இருக்கிறார்கள். எங்கு சென்றாலும் அவர்கள் பேச்சுத்தான்; சாப்பிட்டாலும், படுத்தாலும், நின்றாலும், நடந்தாலும் காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிப்பதிலேயே கண்ணாயிருக்கிறீர்கள். இ[illegible] வக்கீலுக்கு வழி அனுப்பிய உபசாரக் கூட்டத்திலும் காங்கிரஸ் மந்திரிகள் மீது கண்டனந்தான். இது ஏன்? 'பிரதம' மந்திரி பதவி போய்விட்டதே என்ற வயிற்றெரிச்சல்தானே இதற்குக் காரணம். காங்கிரஸ் மந்திரி சபை தொலையாதா? மீண்டும் மந்திரி பதவி கிடைக்காதா, ஆயிரம், ஆயிரமாக உருட்டித் தள்ளலாமே என்ற பேராசைதானே, காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிக்கும்படி உங்களைத் தூண்டுகிறது? காங்கிரஸ் மந்திரிகள் மீதுள்ள துவேஷம் உங்கள் மண்டையில் எவ்வளவு ஏறிப்போயிருக்கிறது

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

தென்றால், அந்தத் துவேஷம் உங்கள் மூளையைக் கூட அசடாக்கிவிட்ட தென்றே சந்தேகப்படுகிறேன் இன்றேல், திருவாநரில் நீங்கள் முண்ணுக்குப் பின் முரணாக, அர்த்தம் விளங்காமல் பேசி இருக்கவே மாட்டீர்கள். சர். பீ. டி ராஜன் உங்களைப்போன்ற ஒரு பேர்வழிதான். அவருக்குச் சரியான தமிழ் பேசத் தெரியாது; தமிழ் போச்சேயென்று உங்களோடு சேர்ந்து ஓலமிட்டார். அதுவும் தமிழ் ஓலமல்ல; ஆங்கில ஓலம். இதையே கல்வி மந்திரி டாக்டர் சுப்பராயன் கண்டித்தார். அவர் கண்டித்ததின் கருத்தை அறியாமல் நீங்கள் திருவாநரில் ஏதேதோ உளறிக் கொட்டியிருக்கிறீர்கள். அதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். இனிமேலாவது பேசும்போது முன்பின் யோசித்துப் பேசுங்கள். பொய் வாயர் என்ற எண்ணத்தில் வாயில் வந்தபடி பேச வேண்டாம்.

டிங்—டாங்

குருக்கள்,

புனா.

தோழரே,

ராஜேந்திரகான் மில் வேலை நிறுத்த சம்பந்தமாக, சமஸ்தான மன்னர் வாக்குறுதிப்படி நடக்கவில்லை யென்பதை எதிர்த்து நீங்கள் பல தினங்கள் பட்டினி கிடந்தீர்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து வந்து விடுமோவென்று நான் பயந்தேன், நல்ல வேளையாகக் காந்திஜியும், ராஷ்ட்ரபதி, சுபாஷ்பாபுவும் குறுக்கிட்டு, உங்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, நீங்களும் உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டீர்கள். காந்திஜி தலைமீது பாரத்தைப் போட்டு விடுங்கள். இந்த மன்னர்களை எழுக்குக் கொண்டுவரவும் ஏழை மக்களுக்கு நன்மை செய்வதற்கான மார்க்கமும் அவருக்குத் தெரியும். காந்திஜியும் உங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்; அதுவே போதும். உங்கள் உண்ணாவிரதத்தின் பலனை நீங்கள் பெற்று விட்டீர்களென்றே நினைக்கிறேன்.

டிங்—டாங்

காஜி அப்துல்லா,

பெஷாவர்.

கல்வி மந்திரியே,

எல்லை அசெம்ளியில் நீங்கள் பேசும்போது, "முஸ்லிம் லீக், இந்திய முஸ்லிம்களின் உண்மையான அபிப்ராயத்தைப் பிரதி பலிப்பதில்லை; அது இந்திய முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதி சபையுமல்ல' என்றீர்கள்; உங்கள் வார்த்தை ஜின்னாவுக்கு மூக்கின்மேல் கோபத்தை உண்டு பண்ணியிருக்கிறது. அடுத்த லீக் கூட்டத்தில் உங்கள் மீது ஒரு முழ நீளத்தில் ஒரு கண்டன தீர்மானம் கொண்டுவரவேண இப்பவே முழுகே தீர்மானித்திருக்கிறார், நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்.

டிங்—டாங்

அடுத்த தலைவர்

காலஞ்சென்ற துருக்கித் தலைவர் கமால் பாஷாவுக்குப் பதிலாக, துருக்கி வீரர் இஸ்மெத் இனோனு துருக்கியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவரும் ஒரு சிறந்த வீரர் கமாலுடன், சுமார் 13 வருடகாலம் நெருங்கிப் பழகி, துருக்கி அபிவிருத்திக்காக பெரிதும் உழைத்தவர். இவர் தலைமையில் துருக்கி இன்னும் அதிக மாகப் பிரதிபலிக்குமென்று நம்புகிறோம்.

ஸ்பெய்ன் யுத்தம்

பிரிட்டன் துரோகம் — — கலகக்காரர் திமிர்

ஸ்பெய்னுக்கும் பிரிட்டிஷார் பெரிய துரோகஞ் செய்து விட்டார்கள். நடு நிலைமை வேதாந்தம்பேசி, ஸ்பெய்ன் சர்க்காரையே சீர்குலைத்து விட்டனர். இந்த நடு நிலைமை காலத்தில்தான் இதாலியும், ஜெர்மனியும், ஏராளமான துருப்புகளையும், விமானப் படைகளையும் ஸ்பெய்னுக்குள் இறக்குமதி செய்து, கலக ஜெனரல் பிராங்கோவுக்கு உதவிச் செய்து வந்தார்கள். இதாலி, ஜெர்மனி உதவி இல்லாதிருக்குமேயானால், இதற்குள் கலகக்காரரை, ஸ்பெய்ன் சர்க்கார் வெருட்டி யடித்திருப்பார்கள் பண்டித ஜவார்லால் நேரு இதே அபிப்ராயம் கூறுகிறார். அவர் யுத்த களங்களுக்குச் சென்று நிலைமையை நேரில் அறிந்து வந்தவர். ஸ்பெய்ன் சர்க்கார் வெற்றி பெற இன்னமும் இடமிருக்கிறதென்பதே ஜவார்லால் அபிப்ராயம். பிரிட்டிஷ், இதாலி ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் ஸ்பெய்ன் சர்க்கார் கடைசி வரையில் போராட்டத்தை நடத்தியே தீருவார்கள் ஸ்பெய்ன் தோற்றாலுஞ்சரி, வெற்றியடைந்தாலுஞ் சரி ஐரோப்பாவின் எதிர்காலம் ஸ்பெய்னையே பொறுத்திருக்கும்.

மும்முரமான போர்

பார்விலோனா துறைமுகத்திற்கு வந்த ஒரு பிரிட்டிஷ் கப்பல் மீது சில விமானங்கள் வெடி குண்டுகளை எறிந்தன. இதனால், 14 பேர் மாண்டனர். 21 பேர்களுக்குக் காயம். எப்ரோ போர் முனையில்தான் மும்முரமான சண்டை நடந்து வருகிறது. புதிதாக மொராக்கோவிலிருந்து வந்த மூர் படைகளைப் பிராங்கோ போர் முனைக்கு அனுப்பி யிருக்கிறார். போர்க்களத்தில் உணவுப் பஞ்சம் அதிகம். ஆகவே, சர்க்கார் தோல்வி யடைந்தே தீருமென கலகக்காரர் கூறுகிறார்கள் ஆனால், எப்ரோ முனையில் சர்க்காருக்கு வெற்றி. அங்குள்ள கலகத் துருப்புகளை சர்க்கார் துருப்புகள் முறியடித்தன பிராங்கோ படைகள் தோல்வி யடைந்து ஓட்டமெடுத்தன. ஸெக்ரே முனையிலும் சர்க்கார் துருப்புகளை, கலகத் துருப்புகளை முறியடித்து வெற்றி பெற்றதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. வெலன்ஷியாவுக்கு வந்த ஒரு பிரிட்டிஷ் கப்பல் மீது கலக விமானங்கள் வெடி குண்டு எறிந்து, அந்தக் கப்பலைப் பழுது படுத்தின.

பிராங்கோ திமிர்

கலகத் தலைவர் பிராங்கோ யுத்த உரிமை கேட்கிறார் இதாலி, ஜெர்மன் துருப்புகளை வைத்துக் கொண்டு, மேலும் துருப்புகளைக் கொண்டுவர உரிமை கேட்கிறார் போலும்! பிரிட்டிஷ்-இதாலி ஒப்பந்தப்படி சகல இதாலி துருப்புகளும் ஸ்பெய்னிலிருந்து காலியாக வேண்டும். இதாலி துருப்புகள் வாபஸ் ஆவதற்குமுன் பிராங்கோ யுத்த உரிமைகேட்பார். ஆனால், இதாலி துருப்புகள் வாபஸ் ஆகாமலேயே பிரிட்டிஷ்-இதாலி ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனிமேல் பிராங்கோ பாடு வேட்டைதான் ஸ்பெய்னிலுள்ள இதாலி, ஜெர்மன் துருப்புகள் அப்படியே இருக்கும் அந்தத் துருப்புகளைக் கொண்டு, பிராங்கோ ஸ்பெய்ன் சர்க்காரைத் தோற்கடிக்கலாம். நடு நிலைமைக் கமிட்டியால் ஸ்பெய்ன சர்க்காருக்குக் கிடைத்த லாபம் அவ்வளவுதான். நடு நிலைமைக் கமிட்டியின் உத்தேசமே கை கூடவில்லை. அதற்கு மாறாகப் பிரிட்டிஷார் காரியஞ் செய்து வந்தபோதிலும், இன்னமும் அந்த நடு நிலைமைக் கமிட்டியையே பிரிட்டிஷார் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு வியாபார தந்திரமாக முஸோலினி உபயோகிக்கிறாரெனத் தெரிகிறது

பஞ்சம்

ஸ்பெய்னில் உண்டாகி இருக்கும் உணவு பஞ்சம் அதிகரித்து வருகிறது. கப்பல்களில் வரும் உணவுப் பொருள்களைக் கலக்காரர் தாக்கிச் சேதப்படுத்தி வருகிறார்கள். ஆகவே, உணவுப் பொருள்கள்மீது வெடிகுண்டுகளை எறிந்து, அந்த உணவுப் பொருள்களுக்குச் சேதம் விளைக்காமல் பாதுகாக்கும்படி இரு சாரரையும் பிரிட்டிஷார் கேட்டிருக்கிறார்கள். கலகக்காரரும், சர்க்காரும் அதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஏற்பாடுகளெல்லாம் தற்காலிக சாந்திதான். இந்த ஏற்பாடுகள் செய்துங்கூட, சர்க்காருக்குச் சொந்தமான இருகப்பல்கள்மீது கலகக்காரர் குண்டுகளை எறிந்திருக்கிறார்கள். இதனால் அதிகச் சேதம் எதுவுமில்லை பிரிட்டன் இதாலி ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதால் இனிமேல், ஸ்பெய்ன் யுத்தம் மும்முரமாக நடக்குமென்று தோன்றுகிறது.

Rg. No. 3379

ரினோ விஜிடபிள் டானிக் ஸிரப்

சிறந்த ரத்தபுஷ்டியை உண்டாக்கும்

டாக்டர்கள் இதை பெருமையாகப் புகழ்ந்து அனேகருக்கு சிபார்சு செய்கிறார்கள். சாம்பில் வேண்டுவோர் 0—2—0 ஸ்டாம்பு அனுப்பினால் உடனே அனுப்பப்படும்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

சி. எப். ஆண்டு சன்ஸ், 503, தங்கசாலைத் தெரு சென்னை.

பொறுக்குமணி

கொரியாவில், ஹெய்ஜோ என்னுமிடத்தில் ஒரு மந்தை பசுக்கள் மின்சாரக் கம்பிகளை மிதித்து நாசப்படுத்திவிட்டன. இதனால் நகரமெங்கும் திடீரென மின்சார விளக்குகள் அணைந்துவிட்டது. சினிமா நாடகக் கொட்டகைகளெங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. சில கைத்தொழிற்சாலைகளுக்குக் கூட இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

* * *

அட்ரியாடிக் என்ற பிரிட்டிஷ் கப்பலை ஜப்பானியர் வாங்கிக்கொண்டனர் லிவர்பூலிலிருந்து செல்லும் கப்பல்களில் மிகப் பெரியது இதுதான். இது 1906ம் வருஷத்தில் கட்டப்பட்டது. இதை 65 ஆயிரம் பொன்னுக்கு விற்றுவிட்டார்கள்.

* * *

லண்டனில் 106 வயதுள்ள ஒரு வயோதிகர் "சுறு சுறுப்பும், வாலிபத் தோற்றமும், பல பாஷைகளின் அறிவுமுடைய 106 வயதுடைய ஒருவருக்கு வேலை தேவை" என்று ஓர் பத்திரிகையில் விளம்பரஞ்செய்திருக்கிறார்.

* * *

தென் ஆப்பிரிக்காவில், கேட்டால் நகரில் சமீபத்தில் ஒரு எருதைக் கொன்றார்கள். எருதை அறுத்த நீக்ரோவர் அதன் வயிற்றினுள் ஒரு தங்கப் பவுனிருக்கக் கண்டெடுத்தனர். அதில 1926ம் வருடம் தெளிவாகத் தெரிகிறது அதை உடனே ஒரு பாங்கிக்குக் கொண்டு போனார்கள். பாங்கிக்காரர் அந்தப் பவுனுக்கு 27 ஷிலிங் கொடுத்தார்.

* * *

லண்டனிலுள்ள ஒரு நாடகசாலையில் 100 அடி நீளமும், 43 அடி அகலமுமுள்ள பெரிய சமுக்காளம் ஒன்றை விரித்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சமுக்காளம் உலகிலேயே கிடையாது. இதன் நிறை 1 டன்.

உடனே தேவை

சிதம்பரம்
போடிநாய்க்கனூர்
திண்டிவனம், கரூர்
திருத்துறைப்பூண்டி
அம்மா பேட்டை
ஸ்ரீவைகுண்டம்
பட்டுக்கோட்டை
மாயவரம்
திருமங்கலம்

மேற்கண்ட ஊர்களுக்கு டிபாஸிட் கட்டக் கூடிய நாணயமுள்ள ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,
"தமிழ் மணி"

சங்கநாதம்

தமிழ்நாடு யாருக்கு காப்பிரைட்?

பெருச்சாளிகள் மணியம்!

வெறும் சண்டப்பிரசண்டம்

மண்ணுங்கட்டி மந்திரிகளா?

பதவிக்கு ஒட்டும் அட்டைகள்

பெருங்காயத் தலைவர்கள்!

(பூம்-பூம்)

தமிழ் நாட்டின் தற்கால நிலைமையைக் காணும் உண்மைத் தமிழரின் மனம் வெடித்துவிடும். தடியெடுத்தவன் தண்டக்காரன் என்ற சொல்லுவது போல் தடித்தனத்தில் ஊறிப் போய்க் கிடக்கும் தான்தோன்றித் தம்பிரான்களுக்கே இது சுபமாகி விட்டது. வெறும் ஆர்ப்பாட்டஞ் செய்து தமிழ் நாட்டைக் குட்டிச் சுவராக்கி வருகின்றனர். தமிழ் நாடு தங்களுக்கே; தமிழ் மொழி தங்களுடையதே யென்று வாய்ப்பறை கொட்டி அலைகின்றனர். தமிழ் நாடும், தமிழ் மொழியும் இந்தக் கோஷ்டியாருக்குத்தானா சொந்தம். இவர்களுக்குத்தானா அது "காபி ரைட்"? தமிழ் நாடு, தமிழ் மொழி என்று கூறிக்கொள்ளும் இவர்களை விட தமிழ் நாட்டின் மீதும், தமிழ் மொழி மீதும் பற்றுள்ள தமிழ் மக்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் உண்மைத் தமிழர்; உண்மை அபிமானிகள்; வெறும் வாய் உருட்டல் பேர்வழிகளல்ல. இவர்களை அலட்சியஞ் செய்து, சில சுயநலக் கும்பல்கள் "தமிழ் நாடு" தமிழ் மொழி எனக் கூச்சல் போடுவது விசித்திரமாக இருக்கிறது. இந்தக் கோஷ்டியாருக்கு தமிழ் மொழிமீது உண்மையான அன்பு கிடையாது. தமிழ் நாட்டின்மீதும் பரிசுத்தமான பக்தி கிடையாது. வெறும் விளம்பரத்துக்காக, இலவச பெயருக்கும், புகழ்ச்சிக்கும் இவ்வாறு ஆர்ப்பாட்டஞ் செய்து திரிகிறார்கள். இந்த ஆர்ப்பாட்டப் பேர்வழிகளின் லட்சணத்தை அறிந்தவர்களுக்கு இந்த உண்மை தெரியும். இதைப் பற்றி நானே பல முறை எழுதி வந்திருக்கிறேன். அதைப்பற்றித் திரும்பத் திரும்ப எழுதி என்ன பலன்?

* * *

தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் இவர்கள்தான் பாதுகாக்கப் போகிறார்களாம்! அந்தப் பொறுப்பைக் கடவுள் இவர்கள் மீது சுமத்தியிருக்கிறார் போலும்! சிவபிரானிடமிருந்து நேரடியாக அழியாத வரம் வாங்கி வந்திருப்பது போல் பேசுகிறார்கள்! இவர்கள் பேச்சுத் தான் பிரமாதமேயொழிய, இவர்கள் கையாலாகாதவர்கள். இவர்கள் கொள்கை ஒன்றுதான்; அதாவது, காங்கிரசை எதிர்க்க வேண்டும். காங்கிரசின் செல்வாக்கை உருக்குலைக்க வேண்டும். காங்கிரஸ்காரர் பதவி வகிக்கும் மந்திரி சபை, நகர சபை முதலியவைகளிலிருந்து காங்கிரஸ்காரர் வெளி வரவேண்டும். அந்தப் பதவிகளை இவர்கள் கைப்பற்ற வேண்டும். பிழைப்புக்கு வழி தேடவேண்டும். இதுதான் அவர்கள் கவலை. இதுதான் அவர்கள் நோக்கம். இதைத் தவிர அவர்களுக்கு வேறு நோக்கம் கிடையாது. தமிழ் நாடு தமிழ் மொழி என்பதெல்லாம் வெறும் பேச்சு. காங்கிரஸ் சர்க்காரைக் கவிழ்க்கவும், காங்கிரஸ் மீது துவேஷத்தை உண்டு பண்ணவும் இந்தக் கோஷ்டியார் தலைகீழாக நின்று குட்டிக் கரணம் போட்டு வந்தார்கள். வருடம் இரண்டுக்கு மேலாகி விட்டது. இவர்களால் காங்கிரசை அசைக்க முடிந்ததா? இல்லை. இனிமேலாவது அசைக்க முடியுமா? முடியவே முடியாது. இது திண்ணம். இவர்கள் கூச்சல்களெல்லாம் காட்டில் போட்ட வெறும் கூச்சலாகவே முடியப் போகிறது. அதற்குச் சந்தேகம் வேண்டாம்.

* * *

தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால், தம்பி சண்டப்பிரசண்டமென்பார்கள். அம்மாதிரி இந்தப் பேர்வழிகளின் ஆர்ப்பாட்டமும், அக்கிரமமும், அத்துமீறிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆளில்லா வீட்டில் பெருச்சாளி மணியம்; தமிழ் நாட்டில் இந்தப் பெருச்சாளிகளே மணியஞ் செய்து வருகின்றன. இந்தப் பெருச்சாளிகளுக்கு வால் பிடிக்கச் சில காலிகளும், கூலிகளும் அகப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடன் சில தாய்மார்களும், சில சகோதரிகளும் சேர்ந்து தாளம் போடுகிறார்கள். இவர்கள் நோக்கமென்ன? இலவச விளம்பரம். நேற்றுவரையில் இந்தத் தாய்மார்களும், சகோதரிகளும் இருந்த சந்து பொந்து கூடத் தெரியாது. பேர் ஊர் இன்னமும் நன்றாகத் தெரியாது. கும்பலோடு கோவிந்தா போட்டால் இவர்கள் பெயரும் அடிபடும். பெரிய தலைவிகளாகிவிடலாம். அப்புறம் எங்கு சென்றாலும் ஒரு வழி ஏற்படும். இது தாய்மார் எண்ணம். காலிகளுக்கும், கூலிகளுக்குமோ, இதுதான் சமயம். அகப்பட்ட வரையில் சுற்றுவதற்கும், பிழைப்புக்கு ஒரு வழி தேடிக் கொள்ளுவதற்கும் இதை மிஞ்சிய சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்காது. இந்தச் சந்தர்ப்பத்தையாவது நியாயமான வழிகளில் உபயோகித்துக் கொள்ளுகிறார்களா? அதுதான் இல்லை. பெரிய சண்டப்பிரசண்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். முரட்டுத்தனத்தில் மூர்க்கங்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் ரகசியமாக அக்கிரமஞ்செய்து வந்த அவர்கள், இப்பொழுது பகிரங்கமாக மூர்க்கத்தனத்தில் இறங்கி வருகின்றனர். காங்கிரஸ் சர்க்கார் என்ன செய்துவிடும் என்ற திமிரும், இறுமாப்பும் அவர்கள் மண்டையில் ஏறியிருக்கிறது. மக்கள் நியாயமாக நடக்கவழியில்லை வழி பறித்து அடிக்கவும் தூஷிக்கவும் தலைப்பட்டுவிட்டார்கள். காங்கிரஸ் மந்திரிகளுக்கோ கவலை இல்லை அவர்களுக்கு என்ன கவலை வந்தது. சொகுசாகப் போய்வரக் கார்கள் இருக்கின்றன. அவர்களைப் பாதுகாக்கப் போலீசார் இருக்கவே இருக்கிறார்கள். ஏழை மக்களல்லவோ, காலிகளின் கலாட்டாக்களுக்கு அஞ்சி நடுங்க வேண்டியிருக்கிறது.

* * *

அஹிம்சா தர்மத்தை மேற்கொண்டிருக்கும் காங்கிரஸ் மந்திரிகள் தர்ம உபதேசஞ் செய்யலாம். காங்கிரஸ் சர்க்கார் பிரஜா உரிமையைப் பறிக்கக்கூடாது; எல்லோருக்கும் காங்கிரஸ் ஆட்சியில் சம உரிமை உண்டு என்று கூறலாம். காலிகள் அட்டூழியஞ் செய்தால் அதையும் பொறுத்துக்கொண்டு தானிருக்கவேண்டும்; அது தேசத்துக்குச் செய்யும் தியாகங்களில் பெரிய தியாகமென்று கூறலாம். ஆமாம்; ஒன்றுமில்லாமல் சில காலிகளிடம் அடிபட்டு, மண்டையை உடைத்துக் கொள்ளுவதா பெரிய தியாகம்! இதைக் கோழைத்தனமென்றல்லவோ மக்கள் நினைப்பார்கள். இந்தக் காலித்தனத்தை அடக்க முடியாத மந்திரி சபை வெறும் பொம்மை—மண்ணாங்கட்டி மந்திரி சபை என்றல்லவோ தமிழர் இகழ நேரிடும். காங்கிரஸ் மந்திரிகள் இந்தக் காலித்தனத்தை அறிந்தும், அதை அடக்காமல் விட்டுவிடப் பார்ப்பார்களேயானால், அதனால் தமிழ் நாட்டுக்கே ஆபத்து. தமிழர் உயிருக்கும் சொத்துக்கும் ஆபத்தாக வந்து முடியும். சென்ற வாரம், கூறியதுபோல், தமிழ்நாட்டில், வகுப்புப் பேய் தலைவிரித்தாடும். வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு, அது பெரிய கழுத்தறுப்பில் வந்து முடியுமென்று மந்திரிகளை எச்சரிக்க விரும்புகிறேன். மந்திரிகளுக்கு இதுபோன்று பல எச்சரிக்கைகள் போயிருக்கலாம். அந்த எச்சரிக்கைகளை அறிந்திருந்தும், மந்திரி சபைக்கு ஆபத்து வந்துவிட்டால், அல்லது காங்கிரஸ் மந்திரிகள் பேர் கெட்டுவிட்டால் என்ன செய்வது என்று வாளாவிருந்தார்களோ, அவர்கள் பெயர் இன்னமும் கெட்டுப்போகும். மந்திரி சபைக்கே ஆபத்து வரும். காங்கிரஸ் மந்திரி சபையைத் தமிழர் வெறுக்க நேரிடும் காங்கிரஸ் மந்திரி சபையைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யும் எதிரிகளோ, மந்திரிகளின் பலவீனத்தை அறிந்து "இன்னமும் கெட்டுப் போகிறோம், பத்துப் பணம் பந்தயம் கட்டு" என்று, சவால் விடுத்து, அக்கிரமங்களில் இறங்கி இருக்கிறார்கள். இவர்களை மடக்காமல் சும்மா விடுவதா? காங்கிரஸ் மந்திரிகள் உடனே தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவார்களாக.

* * *

இவர்கள் அக்கிரமங்களை அடக்குவதற்கு அடக்கு முறைதான் வழியென்று சொல்லவில்லை. அக்கிரமங்கள் நடக்காமல் தடுக்க எத்தனையோ வழிகள் உண்டு போலீசார் எதற்காக இருக்கிறார்கள்? அக்கிரமங்கள் நடக்கும் இடங்களில் கைகட்டி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவா? இல்லை. அக்கிரமங்களை ஒடுக்கவே அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது அதற்காகத்தான். ஆனால், அதே போலீசார்கூட காங்கிரஸ் மந்திரிகளைத் துச்சமாக மதித்துப் பகிரங்கமாக ஏளனம் பேசுவதென்றால், அதைக் கூடவா காங்கிரஸ் மந்திரிகள சகித்துக் கொண்டிருப்பது? காங்கிரஸ் மந்திரிகள் என்ன சாதித்துவிடப் போகிறார்கள்? மஞ்சள் பெட்டியின் மகத்துவம் அவ்வளவுதான் என்று பகிரங்கமாகக் கூறுகிறார்கள். இந்தப் போலீசாருக்குத்தான் பிரதம மந்திரியும் இதர மந்திரிகளும் புகழ்மாலை பாடுகின்றனர். மந்திரிகளோடு ஒத்துழைக்கும்படி கெஞ்சுகின்றனர். கெஞ்சுவதும், கொஞ்சுவதும் கூடாது. மந்திரிகள் அவர்கள் கடமையைச் செய்யவேண்டும். தமிழருக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தைப் போக்கவேண்டும். அதுதான் அவர்கள் கடமை.

* * *

தமிழ் நாட்டில் அக்கிரமஞ் செய்பவர்கள் சுயமரியாதைக்காரர், அல்லது ஜஸ்டிஸ்காரர் என்று மட்டும் கூறவில்லை. இவர்கள் செய்யும் அட்டூழியங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் கண்டு, ஆத்திரமடைந்த பிறர், அந்த சுயமரியாதைக்காரரை மடக்க நினைக்கிறார்கள். இவர்களால் சுயமரியாதைக்காரருக்கும் ஆபத்து இருக்கிறது இவ்வாறு இரு கட்சியினரும் மண்டையை உடைத்துக் கொண்டால் தமிழர் கதி என்ன ஆவது? இந்தச் சிறு குட்டிக் குழப்பங்கள் பின்னால் பெரும் சமூகத்

(அடுத்த பக்கம் பார்க்க)

சங்கநாதம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

தீபாக மூண்டு, தமிழர் உயிருக்கும் சொத்துக்கும் ஆபத்து ஏற்படாமல் தடுக்கும் பொருட்டே காங்கிரஸ் மந்திரிகளை இப்பொழுதே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி வற்புறுத்திக் கேட்பதன் நோக்கம். இந்த ஆபத்தின் நிலைமையை தமிழர் ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பார்களென்றே நினைக்கிறேன்.

* * *

காங்கிரஸ் எதிரிகள் தான் காங்கிரசை எதிர்க்கிறார்களென்றால், காங்கிரசுக்குள்ளாகவே சில புல்லுருவிகள் தோன்றிக் காங்கிரஸின் கௌரவத்தைப் பாழாக்கி வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் பதவி வேட்டைக்காரர். பதவிகளுக்காகவே காங்கிரசில் அட்டைகளைப்போல் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்; இந்த அட்டைகளின் அசட்டுத் தனத்தால் காங்கிரஸ் மானமே போய்விடுகிறது. காங்கிரஸ் பார்ப்பனமயமாகிவிட்டது; காங்கிரஸில் பதவிவேட்டைக்காரர் மலிந்துவிட்டார்கள்; காங்கிரஸ்காரர் சுயநலமிகள் என்றெல்லாம் எதிரிகள் விஷமப் பிரசாரஞ் செய்ய இடமேற்படுகிறது. இதற்குக் காங்கிரஸ்காரர் ஒருபோதும் இடங்கொடுக்கக் கூடாது. காங்கிரசில் புல்லுருவிகளும், பதவி மோகம் பிடித்த நெல்லிக்காய் மூட்டைகளும் இருக்கும் வரையில இந்தப் புகாருக்கு இடம் இருந்துகொண்டுதானிருக்கும். காங்கிரசில் பதவிக்காக ஆசைப்படுகிறவர்கள் பெரும்பாலும் முதுகெலும்பு இல்லாதவர்கள். பாதிப் பார்ப்பனா! பார்ப்பனர் வலையில் சிக்கி அவர்களுக்குத் தலையாட்டும் தம்பிரான்கள் ஏராளமாக இருக்கிறார்கள் அசெம்பிளியையும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களையும் எடுத்துக்கொண்டால், இந்த உண்மையை நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். எதிரிகளைவிடக் காங்கிரசுக்குப் பரம விரோதிகள இவர்கள்தான். ஆகவே, காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த அனாதத்தை-கஷ்ட காலத்தைத் தீவிரத்தில் போக்கியே தீரவேண்டும். இதற்குத் தமிழர், உண்மையான தேசாபிமானிகள் முன்வர வேண்டும். அவர்களுக்குப் பதவிப் பித்துக்கூடாது. தியாகத்துக்கு அஞ்சாமலிருக்கவேண்டும். அத்தகைய தமிழர் முன்வருவார்களேயானால், காங்கிரசை இலகுவில் பரிசுத்தப்படுத்தலாம். காங்கிரசிலிருக்கும் நெல்லிக்காய் மூட்டைகளைக் காங்கிரசிலிருந்து உருட்டி, வெளியில் தள்ளலாம். பாதிப் பார்ப்பனர், முதுகெலும்பில்லாதவர்களையும் பார்ப்பனருக்குத் தாளம் போடும் தவிட்டுக் கோழிகளையும் வெருட்டியடிக்கலாம். காங்கிரஸ் மந்திரிகளைக்கூடத் தமிழர் ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துவிடலாம். தமிழர் நன்மையைக் கோருவதற்கும், எதிரிகள் தலையை மடக்குவதற்கும் அதுதான் வழி.

அந்த வழி என்னவென்று அறிய தமிழர் துடிப்பார்களென்பதில் சந்தேகமில்லை. தமிழ் நாடு காங்கிரஸ் மகாநாடு அதி சீக்கிரம் நடைபெறப் போகிறது. புதிய தலைவர் தேர்ந்தெடுக்கவேண்டிய காலம் வருகிறது. தலைவர் மட்டுமல்ல; தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. இச் சமயத்தில் உண்மையான தமிழர் என்ன செய்யவேண்டும். போலிகளுக்குக் காங்கிரசில் இடம் கொடுக்காமல். தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர், காரியதரிசி பதவிகளையும், காரியக் கமிட்டி அங்கத்தினர் பதவிகளையும் உண்மையான காங்கிரஸ் அபிமானிகள் கைப்பற்றவேண்டும். ஏற்கனவே நான் கூறியதுபோல் அவர்களுக்குப் பதவி மோகம் என்பது அணுவளவும் இருக்கக்கூடாது. தமிழ் நாடு சேவை, காங்கிரஸ் பணி இந்த இரண்டையுமே அவர்கள் ஒரே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியைக் கைப்பற்றுவார்களேயானால், தமிழ் நாட்டைப் பிடித்த பீடை தானாகவே ஓடிவிடும். காங்கிரஸ் புனிதமடையும் காங்கிரசைக் கைப்பற்றி, ஆர்ப்பாட்டஞ் செய்பவர்களின் கொட்டத்தை நிமிஷத்தில மடக்கிவிடலாம். எதிரிகளின் சூழ்ச்சியையும் தலையெடுக்கவிடாமல் நசுக்கிவிடலாம். ஆகவே, உண்மைத் தமிழர், தமிழ் நாட்டு இளஞ்சிங்கங்கள் இந்தச் சேவை செய்ய உடனே முன்வரவேண்டும். இவர்கள் பெருந்தியாகம் செய்ய வேண்டியிருக்கும். ஊர் ஊராகக் கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரஞ்செய்து, உண்மைத் தமிழரையே தேர்ந்தெடுக்கும்படி வேலை செய்யவேண்டும் தாலுகா, ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டிகளைக் கைப்பற்றிவிட்டால், அப்புறம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியையும், காரியக் கமிட்டியையும், தலைவர், காரியதரிசிகள் பதவியையும் கைப்பற்றுவது வெகு சுலபம். தமிழர் இன்றே இப்பொழுதே அதற்காகத் தீவிர பிரசாரஞ்செய்யப் புறப்படுவார்களாக. பதவி வேட்டைக் காரரும், காங்கிரசை தங்கள் குடும்பச் சொத்தாக மதித்து, இதுவரையில் அனுபவம் செய்துவந்தவர்களும் இதற்கு இடையூறாக இருக்கலாம். எதிர் பிரசாரங்கூடச் செய்யலாம் தமிழ் வீரர் அதற்கு அஞ்சக் கூடாது கருமமே கண்ணாகவிருந்து உடனே வேலை ஆரம்பிப்பார்களாக. இன்றேல், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிலைமையும், காங்கிரஸ் தமிழர் கதியும் சந்திசிரிக்க நேரிடுமென்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் கூறுவது பலருக்குக் கோபமாக இருக்கலாம். காங்கிரஸ் பூனைகளுக்கும், காங்கிரஸ் எதிரிகளுக்கும் இது நாராசம்போல் தோன்றலாம். இது சாத்தியமாவென்று வேறு சிலர் கேட்கலாம். இது சாத்தியமல்ல வென்று எவரும் கூற முடியாது. சாத்தியமில்லையென்று தமிழர் நினைப்பார்களேயானால், தமிழர் கோழைகள்கையாலாகாதவர்கள் என்றுதான் சொல்லுவேன். தமிழருக்குக் காங்கிரஸ் அபிமானமில்லை என்ற,ஏற்பட்டுவிடும். இந்த அவமானத்தைக் காங்கிரஸ் தமிழர் ஏற்றுக்கொள்ளப்போகிறார்களா? ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்பது திண்ணம். வீரத் தமிழரின் இரத்தம் இன்னமும் துடிதுடித்துக் கொண்டுதானிருக்கிறது. தமிழ் நாட்டையும், தமிழ் கலைகளையும், தமிழ்த் தாயின் மானத்தையும் பாதுகாத்தே தீருவார்கள். அதற்காகவே கங்கணங் கட்டிச் சமய சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதை நான் அறிவேன். அவர்களுக்குச் சரியான சந்தர்ப்பம் இதுதான். இதைவிட வேறு சந்தர்ப்பம் கிடையாது

* * *

காங்கிரஸ் எதிரிகளும், சுயமரியாதைக்காரரும் இந்தச் சந்தர்ப்பத்தை எப்படி தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டார்களோ அதே போல், உண்மைத் தமிழ் வீரரும் இச்சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ள வேண்டும் "தமிழ் மணி" அவர்களுக்கு இறுதி வரையில் தொண்டு செய்யக் காத்திருக்கிறது. "தமிழ்மணியின்" லட்சியம் அதுவே, அதில் என்ன இடையூறு வந்த போதிலும் "தமிழ்மணி" பொருட் படுத்தப்போவதில்லை சென்னையில் கூடிய ஒரு தமிழ் பெண்கள் மகாநாட்டில், "தமிழ் மணி"யைத் தமிழர் ஆதரிக்கக்கூடாதென்று சிலர் பேசினார்கள் தீர்மானங்கள் நிறைவேற்றினார்களென அறிய வந்தேன். இந்தத் தாய்மார் சகோதரிகளுக்கு "தமிழ் மணி" பிடிக்காதிருக்கலாம். அவர்கள் வண்டவாளத்தை வெளியில் இழுத்து விடுவதால், "தமிழ் மணியின் சங்கநாதம் அவர்களுக்கு நாராசமபோலிருக்கலாம். ஆனால், "தமிழ் மணி" எப்பேர்ப்பட்டது, தமிழ்மணியின் கொள்கை என்னவெனபதைத் தமிழ் மக்கள் அறிந்தே இருக்கிறார்கள். தமிழ் மணிக்கு தமிழ் அன்பர்கள் ஆதரவு எப்பொழுதும் இருக்கும். தமிழ் தாய்மார் அன்பும் அதற்கு ஏராளமாக உண்டு. பதினையாயிரக் கணக்கில் இன்று வெளியாகும் "தமிழ்மணி" பதினைந்து பிரதிகளாக வெளி வந்தபோதிலுஞ் சரி, "தமிழ்மணி" அதின் கொள்கையிலிருந்து இம்மியும் நழுவாது. கடைசிவரையில் சத்தியத்துக்காகப் போராடியே தீரும். தமிழுக்காகவும் தமிழருக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும், தாய்நாட்டிற்காகவும், கடைசி வரையில் சுதந்திரத்துக்காகவும் அது போராடியே தீரும். அதைத் தமிழ் நாட்டுத் தாய்மார்கள் அறிவார்களாக. அவர்கள் ஏற்கனவே அறிந்திருக்கலாம் அறிந்திருந்தும் மறந்து அந்தத் தீர்மானம் செய்திருப்பார்களேயானால், அவர்களுக்கு மீண்டும் "தமிழ் மணி"யின் கொள்கை என்னவென்பதை ஞாபகமூட்டுகிறேன். தாய்மாரே, உங்களில் சிலர் யார், உங்கள் போக்கு என்ன, உங்கள் கர்மம் எதுவென்பதை நானறிவேன்; நன்றாக அறிவேன். அதைப்பற்றிப் பச்சையாக எழுதப் புகுந்தால், தமிழ் அன்பர் கண்ணீர் வடிக்க நேரிடும். அதற்காக இத்துடன் நிறுத்தி விடுகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள்.

* * *

காங்கிரஸை எதிர்க்கத் தமிழ் வேஷம் போட்டுக் கொண்டு திரியும் கபட வேஷதாரிகளைப்போல் தற்காலத்தில் தொழிலாளர் தலைவர்கள், சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்காக ஏதோ உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் ஒருங்கே தத்தஞ்செய்து விடுபவர்களைப் போல பாசாங்கு செய்கிறார்கள். இவர்கள்தான் "பெருங்காயத் தலைவர்கள்!" பெருங்காயம்போல் எதற்கும் நான் முந்தி, நீ முந்தியென்று ஓடி வருவார்கள். ஆனால் தோழர்கள்மீது இவ்வளவு உண்மையான அன்பு கிடையாது. தோழர்களை ஏணிப்படிகளாக உபயோகித்துப் பெரிய மனிதர்களாகவே இந்தப் "பெருங்காயத்" தோழர் தலைவர்கள் எண்ணம் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் விஷயமாகப் பல தடவைகளில் தோழருக்கு எச்சரிக்கை செய்திருக்கிறேன். தோழர்களே இந்தப் பெருங்காயப் பேர்வழிகளிடம் எப்படியோ சிக்கிவிடுகிறார்கள். இதின் பயனென்ன? போட்டி; தோழர்களுக்குள் போட்டி; தலைவர்களுக்குப் போட்டி, சங்கங்களுக்குப் போட்டி. இந்தப் போட்டியால் தான் மதுரையில்கூட 144 வது செக்ஷனைப் பிரயோகிக்க நேர்ந்திருக்கிறது இதனால் யாருக்கு நஷ்டம்? பெருங்காயத் தலைவர்களுக்கா? இல்லை. ஏழைத் தோழர்களுக்குத்தான் கஷ்டமும், நஷ்டமும ஆகவே, இந்தப் பெருங்காயத் தலைவர்களிடம் இனிமேலாவது எச்சரிக்கையாக இருக்கும்படி தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தலைவர்கள் பேச்சைக் கேட்டு தோழர்களுக்குள்ளாகவே சச்சரவு செய்து கொள்ளவேண்டாம். தோழர் அனைவரும் சகோதரர், தோழர் யாவரும் ஒற்றுமையாக இருந்தால் தான் வாழ்வு, வெற்றி. இன்றேல் தாழ்வு, தோல்வி என்பதைத் தோழர்கள் மறந்துவிட வேண்டாம்.

மூன்று மாதம் ஆன பின்புதான் குழந்தைகளின் கண்களினின்றும் கண்ணீர் வருமாம். அதற்குமுன் அழும் குழந்தைகள், கண்ணீர் விடாமலேயே அழுகின்றன.

ஏஜண்டுகள் தேவை

உலகப் பிரசித்திப் பெற்ற "பாப்பீ"யின் வாசனை திரவியங்கள், அத்தர் தினுசுகள், ஆசகில செண்டுகள், ஹேர் ஆயில்கள், இன்னம் பற்பல வாசனை திரவியங்களை விற்க தக்க ஏஜண்டுகள் வெளியூர்களில் தேவை.

ஏஜண்டுகளுக்கு தக்க சௌகர்யங்கள் செய்யப்படும் (கேட்லாக் இனாம்)

விவரங்களுக்கு:—பாப்பீ பெர்பீயுமரீஸ்

நெ 16, பைரூன் ஜங் பகதூர் வீதி, மவுண்ட்ரோட், மதராஸ்.

பொம்மை சர்க்கார் நிற்குமா?

ஜப்பான் கனவு பாழ்

சீனாமீது அக்கிரமமாகப் படையெடுத்துச்சென்றிருக்கும் ஜப்பானியர், அங்கு வெற்றிமேல் வெற்றி பெற்று வருகின்றனர். சீனாவில், ஜப்பானியர் செய்யும் அக்கிரமங்களை சொல்லி முடியாது. இதுவரையில் கோடிக்கணக்கான சீன மக்கள் பிணமாயினர். யுத்தத்தில் மட்டுமல்ல; நிராபராதிகளான சீனர்களும், வயோதிகர், பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் ஈவு, இரக்கமற்று சீனர் சுட்டுக்கொன்று, குவித்து வருகின்றனர். சீனப்பெண்களிடம் ஜப்பான் சோல்ஜர்கள் நடந்து கொள்ளும்விதமோ மகாமோசம். மிருகங்களும் நடந்துகொள்ளாத விதத்தில் நடந்து கொள்ளுகிறார்கள். இவர்கள் பேய்த்தனமான செயல்களைப்பற்றி ஏற்கனவே பல செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அந்த அக்கிரமங்கள் இன்னமும் நின்றபாடில்லை. பெண்கள் உயிருக்குத் தப்பி ஓடுவதைவிட, அவர்கள் மானத்துக்குப் பயந்தே நகரங்களிலிருந்து ஓடி ஒளிகின்றனர். பெரும்பாலான சீனக் குடும்பங்கள், மலைப்பிரதேசங்களுக்குச் சென்று, மறைமுகமாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். அங்கு ஆகாரத்துக்குக் கஷ்டப்பட்டு மடியும் குடும்பங்கள் பல. இது இவ்வாறிருக்க, நகரங்களோ தீக்கிரையாகி தரைமட்டமாகி வருகின்றன. நான்கிங் போன்ற முக்கிய நகரங்கள் இன்று பாழ். பெரிய பெரிய கட்டிடங்களெல்லாம் தரைமட்டம். நான்கிங்கில் சுமார் 50 கோடி பவுன் நஷ்டம். சுற்றுப்புறங்களிலும் இதே நஷ்டத்தையே ஜப்பானியர் உண்டு பண்ணியிருக்கிறார்கள். இது மற்றொரு கோடிபவுன் நஷ்டமிருக்கும். ஒரு நகரத்தில், அதாவது, நான்கிங்கிலமட்டும் சுமார் 50 கோடி பவுன் நஷ்டம் மேற்பட்டிருக்கிறது. இதுபோன்று எத்தனையோ பெரிய நகரங்கள் பாழடைந்திருக்கின்றன; எத்தனையோ ஜில்லாக்கள் அழிந்திருக்கின்றன. அந்த நஷ்டங்களையெல்லாம் கணக்குப் பார்ப்போமானால் அது எண்ணில் அடங்காது.

ஜப்பானியர் அட்டூழியத்தால் சீனாவில் பல லக்ஷக்கணக்கான குழந்தைகள் அனாதையாக நின்று தவிக்கின்றன. அந்தக் குழந்தைகளைப் போஷிக்கவும், துணிமணிகள் கொடுத்து ஆதரிக்கவும் சீனர் தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். ஜப்பானியர் வெடிகுண்டு, ஈட்டிக் குத்துக்களுக்கு இரையான சீனக் குழந்தைகளும், பெண்களும் ஏராளம்

> சீனாமீது படையெடுத்துச் சென்றிருக்கும் ஜப்பானியர் வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறார்கள். அவர்கள் அங்கு செய்யும் அட்டூழியங்களை சொல்லி முடியாது. பெரிய நகரங்களைத் தரை மட்டமாக்கி வருகிறார்கள். சீன மக்களை லக்ஷம் லக்ஷமாகக் கொன்று குவிக்கின்றனர். சீன சர்க்காருக்குப் போட்டியாகப் பொம்மை சர்க்காரை ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால், ஜப்பானியர் சீனரை ஜெயித்துவிட முடியுமா? முடியாது. சீனர் கடைசிவரையில் ஜப்பானியரை எதிர்த்தே தீருவார்கள். ஜப்பானியர் கனவு பலிக்கப் போவதில்லை!

ஜப்பான் கனவு!

சீனாவை ஜெயித்துவிட ஜப்பான் கனவு காண்கிறது. சீனாவை மட்டுமல்ல; சீனாவுக்குப்பின், மங்கோலிய தேசங்களையும், அதன்பின் படிப்படியாக திபேத், நேபாளம் முதலியநாடுகளை ஜெயித்து, கடைசியாக இந்தியாவுக்குள்ளும் படையெடுத்துவிடலாமென்பது ஜப்பானியர் எண்ணம். திபேத் எல்லைப்புறங்களில ஜப்பானியர் விமானங்கள பறந்து சென்று வெடிகுண்டுகளை எறிந்து வருகின்றன. அங்குள்ள மக்களின் மனதில் பீதியை உண்டு பண்ண வேண்டுமென்பது அவர்கள் நோக்கம். ஜப்பானுக்கு, ஜெர்மனி உதவி இருக்கிறது. இதாலியும், ஜப்பானை ஆதரிக்கிறது. ஆனால், ஜப்பானியருக்கோ, வெள்ளையர் அனைவருமே பரம விரோதி! சீனாவின் வர்த்தகம் முழுவதையும் ஜப்பானியரே கைப்பற்ற வேண்டுமென்பது ஜப்பானியர் கருத்து. சீனாவில் வர்த்தகஞ் செய்யும் சகல அந்நியரையும் வெருட்டியடிக்க அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் காரியம் கைகூடும் வரையில் அவர்கள் ஜெர்மனி இதாலியுடன் உறவு கொண்டாடுகின்றனர். ஆனால், அது உண்மையான நட்பல்ல, சீனாவைக் கைப்பற்றும் வரையில் அந்த நட்பு நீடித்திருக்கலாம். அதன்பின் சீனாவி…

பழிக்குப் பழி வாங்குவர்

னர்ள பிரிட்டிஷாருக்கு என்ன கதி நேரிடுமோ, அதே கதிதான் ஜெர்மானியருக்கும், இதலியருக்கும் கிடைக்கும்.

வெற்றி சாஸ்வதமா?

சீன-ஜப்பான் யுத்தம் ஆரம்பித்து சுமார் 15 மாதங்களாகின்றன. இந்தச் சொற்பக் காலத்தில் ஜப்பான், சீனாவில் முக்கியமான பாகங்களை ஜெயித்துவிட்டது. இன்னமும் ஜெயித்துக்கொண்டே போகிறது. சீனாவின் ஜனத்தொகையோ, ஜப்பான் ஜனத்தொகையைவிட 10 மடங்கு அதிகம். அவ்வாறிருந்தும், ஜப்பானியரிடம் சீனர் தோல்வியடைகின்றனர் ஏன்? ஜப்பானின் நவீன யுத்த தளவாடங்களே அதற்குக் காரணம். அந்த யுத்த தளவாடங்கள் சீனாவுக்குக் கிடையாது. சீனாவிடம் போதிய யுத்த தளவாடங்களும், சீன ராணுவங்கள் நல்ல யுத்த பழக்கமும் பெற்றிருக்குமேயாயின் இன்று சீனாவின் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். ஜப்பானின் போக்கும் மாறியிருக்கும். உலகிலேயே ஒரு பெரிய தேசமாக விளங்கும் சீனா, இன்று ஒரு சிறு தேசமாகிய ஜப்பான் அட்டூழியங்களைச் சகிக்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறது. இதுவரையில் சீனா, ரஷியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அந்த உதவிக்கும் இப்பொழுது வழியில்லை. ரஷியா, சீனாவுக்கு உதவிச் செய்வதாகப் பகிரங்கமாகக் கூறியும், உதவிக்கு வரவில்லை. ஜப்பான் இவ்வளவு தீவிரமாக முன்னேறி வருவதற்கு இதுவே காரணம். ரஷியா, சீனா

(அடுத்த பக்கம் பார்க்க)

ஜப்பானியரின் சித்திரவதைக்கு உயிரோடு பலியான ஒரு சீனர். இவர் கழுத்தில் கயிற்றைக் கட்டி அன்ன ஆகாரமின்றி அப்படியே ஒரு மரத்தோடு கட்டி விட்டனர். இவர் உயிர் அங்கு அகோரமாகப் பிரிந்து, இந்தச் சீனர் மாண்டார்.

ஜப்பான் சோல்ஜர்களின் மிருகத்தனத்துக்கு இலக்காகி பெற்ற குழந்தையுடன் உயிர் துறந்து கிடக்கும் ஒரு சீனப் பெண், இவ்வித பரிதாபகரமான சம்பவங்கள் சீனாவில் தினசரிக் காட்சியாக இருக்கின்றன

பொம்மை சர்க்கார் நிற்குமா?

(முன் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு உதவிச் செய்திருக்குமேயானால், இதற்குள் ஜப்பான பாடு வெல வெலத்துப் போயிருக்கும். ஒருவேளை சீனா-ஜப்பான் யுத்தம் முடிவடைந்திருக்கலாம்.

ஜப்பான் தந்திரம்

சீனாவுக்கு வேறு தேசங்களின் உதவி இல்லை யெனக் கண்டதும் ஜப்பான் திமிர் அதிகரித்துவிட்டது. சீனாவில் சொல்லிமுடியாத நிஷ்டூரங்கள் செய்து, சீனாவை ஜெயித்து வருகிறது. சீனாவின் கடற்கரைப் பிரதேசங்களை யெல்லாம் கைப்பற்றியதோடு, முக்கியமான ரயில்வேக்கள், துறைமுக நகரங்கள் முதலியவற்றையும் கைப்பற்றிவிட்டது. அன்னிய தேசங்களின் வியாபாரத்தை எந்த வழிகளில் தடுக்க முடியுமோ, அந்த வழிகளில் தடுத்துவிட்டது. சீனாவுக்கு வெளி தேசங்களின் இறக்குமதி கிடையாது; போக்கு வரத்துப் அநேகமாக இல்லை. சீனாவின் பல பிரதேசங்களை ஜப்பான் கைப்பற்றிய பின்னர், ஷியாங்-கே-ஷேக்

ஜப்பானியரின் பேய்த்தனமான கொடுமைகளுக்குத் தப்பியோடி, மலைப் பிரதேசங்களில் வசித்துவரும் ஒரு ஏழைச் சீனக் குடும்பம். மலைப் பிரதேசங்களில் ஆகார வசதியின்றி இவர்கள் வருந்துகின்றனர்.

டணியவில்லை. ஜப்பானுடன் சமரசஞ் செய்துகொள்ள அவர் மறுத்தே வருகிறார். இரண்டிலொன்று பார்த்து விடுவதென அவர் உறுதி கொண்டிருக்கிறார். அதே உறுதி, ஒவ்வொரு சீனரிடமும் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. சீனாவின் உறுதியைக்கண்ட ஜப்பானியர் ஒரு தந்திரஞ்செய்து வருகிறார்கள். ஜப்பானியர் ஜெயித்த இடங்களில் பொம்மை சர்க்காரை ஏற்படுத்தி வருகிறார்கள். அந்த பொம்மை சர்க்கார் ஜப்பானை நம்பி வாழவேண்டியிருக்கிறது. ஜப்பான் அனுமதி இல்லாமல் அந்தப் பொம்மை சர்க்கார்கள் கால் கைகளை அசைக்கவும் முடியாது.

பொம்மைகள் நிற்குமா?

ஜப்பான் உதவியை எதிர்பார்த்திருக்கும் இந்த சீனப் பொம்மை சர்க்கார்கள் நிற்குமா? நிற்க முடியாது. அவை எக்காலமும் ஜப்பானின் தயவை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கும். சீனா முழுவதையும் ஜப்பானியர் ஜெயித்துவிட்டதாக வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுதும் ஜப்பானியர் சீனாவை நசுக்கிவிட முடியாது. ஜப்பானியரை எதிர்ப்பதையே சீனர் ஒரே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். சீனப் பொதுவுடமைக் கட்சியினர், சீன மத்திய சர்க்காரை இடைவிடாமல் எதிர்த்து வந்தது தெரிந்த விஷயம். ஷியாங்-கே-ஷேக் கூட அந்தப் பொதுவுடமைக் கட்சியை நசுக்கப் பார்த்தார். அவரால் கூட முடியவில்லை. இப்பொழுது ஜப்பானியரை எதிர்க்கும்நோக்கத்துடன் பொதுவுடமைச்சீனர், மத்திய சீன சர்க்காருடன் சேர்ந்து சண்டை செய்கிறார்கள். ஜப்பான் பொது விரோதி. அதை எதிர்க்க வேண்டியது சீன மக்கள் கடமை. பொதுவுடமை சீன மக்களும் அதை ஒரு முக்கியமான கடமையாகக் கொண்டு ஜப்பானியரை எதிர்த்து வருகிறார்கள். ஜப்பானியரை எதிர்க்க முடியாமல் சீனர் தோல்வியடைவார்களேயானால், சீனர், ஜப்பானியருக்குப் பணிந்து விடமாட்டார்கள். சீனர் எதிர்ப்பு கடைசி வரையில் இருந்தே தீரும். சீன இளைஞர் உள்ளத்தில் சுதந்திரத் தீ எரிந்து கொண்டிருக்கிறது. சீனர் சுதந்திரத்துக்கு ஆபத்தாக வந்திருக்கும் ஜப்பானியரை, அவர்கள் பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். ஜப்பானியர் சீனாவை ஜெயித்தபோதிலும், சீனர் பழி வாங்கியே தீருவார்கள். இன்று பொதுவுடமைக் கட்சியை ஆதரிக்காத சீனர் கூட இனிமேல் பொதுவுடமைக் கட்சியை ஆதரிக்க முன்வந்து விடுவார்கள். ஒரு வேளை, சீனா முழுவதுமே பொதுவுடமைக் கட்சியாக மாறினாலும் மாறலாம். பொதுவுடமைச் சீனர், ஜப்பானியரை வெருட்டியடித்தாலொழிய நிம்மதியாக இருக்கமாட்டார்கள். இன்று நடக்கும், சீன-ஜப்பான் யுத்தம் இன்னும் எத்தனையோ வருடங்களுக்கு நீடிக்கலாம். அதாவது, ஜப்பானியர் அக்கிரமத்தையும், அட்டூழியத்தையும் அடியழிக்கும் வரை சீனர் போராடியே தீருவார்கள். இது திண்ணம். ஆகவே, சீனாவை ஜெயித்து ஆசியாவில் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திவிடலாமென ஜப்பான் கனவு கண்டால் அந்தக் கனவு ஒருபோதும் பலிக்காது அது பகற்கனவாகவே முடியும்!

MARK TRADE
Registereb.
இழுப்பு இருமலுக்கு
ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்
எங்கும் கிடைக்கும்
ஜீ. எஸ். ஸ்டியர்ஸ் கம்பெனி,
21. ராசப்பா செட்டி வீதி, மதராஸ்.

உங்கள் தேக பலத்துக்கு
"போர்ட்டியர்"
முக்கியமான மருந்து



உங்கள் தேக பலம் குறைந்திருந்தால்
"போர்ட்டியர்"
மருந்தைச் சாப்பிட்டு உங்கள் பலத்தை
மீண்டும் பெற்றுக்கொள்ளுங்கள்
15 தினங்கள் சாப்பிடக்கூடியது
விலை ரூ. 2-4-0

ஏஜண்டுகள்:-
ஸ்பென்சர் அண்டு கம்பெனி,
லிமிடெட். மதராஸ்.

ஒரே பிரசவத்தில் ஒரே மாதிரி

ஒரே பிரசவத்தில் சிலபெண்கள் இரட்டைக் குழந்தைகளைப் பெறுகிறார்கள். இது சாதாரண சம்பவம். மூன்று நான்கு குழந்தைகளைக்கூடப் பெற்றெடுக்கின்றனர். இதுவும் அவ்வளவு ஆச்சரியமல்ல. ஆனால், ஒரே

பிரசவத்தில் 5, 6, 7, 8, குழந்தைகளைப் பெறுவதென்றால், அது பெரிய ஆச்சரியந்தான் ஆனால், இவ்வித சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. அதைப்பற்றி இங்கு எழுதத் தேவை இல்லை: ஒரே பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளை பற்றியே இங்கு சில விஷயங்கள் குறிப்பிடவேண்டியிருக்கிறது ஒரே பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகள் சாயலில் ஒத்திருப்பது சர்வ சாதாரணம். ஆனால், அவர்களில் ஏதேனும் வேற்றுமை இருப்பதுமுண்டு. படத்தில் காட்டியிருக்கும் 3 குழந்தைகளும் ஒரே பிரசவத்தில் பிறந்தவர்கள். இவர்கள் சாயலில் ஒத்திருக்கிறார்கள். இவர்கள் ஊர் லெய்ட்டன் ஸ்டோன் என்பது இவர்கள் சாயலில் எவ்வாறு ஒத்திருக்கிறார்களென்றால் இவர்கள் பெற்றோருக்குக்கூட யார் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் பெயரைக்கொண்டே அறிந்துகொள்ளுகிறார்கள். இப்பெண்கள் பள்ளிக் கூடத்துக்குப் போனாலும் அங்கும் இந்தக் கஷ்டந்தான். பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு இவர்கள் சாயல் தர்மசங்கடமாக இருக்கிறது ஆகவே அவர் ஒரு யுக்தி செய்தார் அந்தக் குழந்தைகளின் பெயரின் தலையெழுத்தை, அவர்கள் சட்டையில் தைத்து வைக்கும்படி அவர்கள் பெற்றோருக்குத் தெரிவித்திருக்கிறார். இக் குழந்தைகளின் பெயர் டொராதி, ஈரிஸ், மிஸ்ரா.

துர்சகுனக் கற்கள்!

ஹங்கேரியாவில் எல்பா என்னும் ஒரு நதி இருக்கிறது. இந்த நதிக்குள் சிறு பாறைகளிருக்கின்றன நதியில் ஜலம் வற்றி இந்தப் பாறைகள் வெளியில் தெரிந்தால், இந்தப் பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு நடுக்கந்தான். தேசத்துக்கு ஏதோ ஒரு துர்சகுனம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகிறார்கள். இந்தப் பாறைகள் வெளியில் தெரியும்போதெல்லாம் ஏதேனும் யுத்தங்கள் ஏற்பட்டே தீருமாம்! மகாயுத்தத்துக்கு முன் இந்தப் பாறைகள் வெளியில் தோன்றினவாம். அதற்கு முன்னும் ஒருமுறை இந்தப் பாறை வெளியில் தெரிந்தபோது பிராஞ்சு-பிரஷியா யுத்தம் நடந்ததாகக் கூறுகிறார்கள்.

உங்களுக்குத் தெரியுமா?

121 மாயக் கற்கள்!

இங்கிலாந்தில் ஸ்டென்ஹென்ஞ் என்னுமிடத்தில் 121 கற்கள் வரிசையாக நிற்கின்றன இந்தக் கற்களும் துர்சகுனம் காட்டுவதாக இங்குள்ளவர்கள் நினைக்கிறார்கள். இந்தக் கற்களில் ஏதாவது ஒரு கல் சாய்ந்துவிட்டால், பிரிட்டன் ராஜவம்சத்தினருக்கு ஏதேனும் அனர்த்தம் ஏற்படுவதுண்டாம்! வெபிஸ் என்னும் பழங்காலத்து, தனவந்தர் வம்சமொன்று இங்கிலாந்தில் இன்னமும் இருந்து வருகிறது அந்தக் குடும்பத்தினருக்குச் சொந்தமான ஒரு மாளிகை இருக்கிறது. அந்த மாளிகையின் மாடியிலிருந்து பெரிய கல்லொன்று புரண்டு விழுமேயாயின், அந்தக் குடும்பத்தில் யாராவது இறப்பது நிச்சயமாம்!

பளிங்குக் கல் விசித்திரம்!

துருக்கியில் கான்ஸ்டாண்டிநோபிள் என்னும் நகரில் செயின்ட் சோபியா என்னும் பகுதி ஒன்றுண்டு. இந்த பகுதியின் மேற்குப் பாகத்தில் ஒரு பளபளப்பான பளிங்குக் கல் ஒன்றிருக்கிறது. இதை நெடுங்காலத்துக்கு முன் பாரசீகத்திலிருந்து கொண்டுவந்து, அந்த பகுதியில் வைத்திருக்கிறார்கள். அந்தப் பளிங்குக்கல் பளபளப்பாக மின்னிக்கொண்டிருக்குமேயானால், இஸ்லாம் மதம் அபிவிருத்தியடைந்து உன்னத ஸ்திதியிலிருப்பதைக் குறிப்பிடுமாம். இதுவரை நிறமாறி விடுமாம். அப்பொழுது, இஸ்லாம் மதத்துக்கு இடையூறு ஏற்படுவதாக அர்த்தமாம். சிற்சில சமயங்களில் அந்தப் பளிங்குக் கல் கருப்பாக நிறமாறிவிடுமாம். அப்படியானால், இஸ்லாம் மத தர்மம் குன்றி இஸ்லாம் மதத்துக்கே ஆபத்து அதிகரிக்கிறதென அர்த்தமாம்! துருக்கியர் பலர் இந்த மாயப் பளிங்குக் கல்லின் மாற்றத்தை இன்னமும் நம்பி வருகிறார்களென்று தெரிகிறது

பன்றியின் விசித்திரம்!

பன்றிகள் மனிதருடன் பழகுவது வெகு அபூர்வம். ஆனால், படத்தில் காட்டியிருக்கும் பன்றி, விசித்திரமானது இது எசக்ஸ் பிரதேசத்தில், டெர்லிங் என்னுமிடத்தில் வசித்து வருகிறது. இந்தப் பன்றியை வளர்த்து வருவது ஒரு பெண். அந்தப் பெண்ணிடம் இது அளவற்ற விசுவாசத்துடன்

நடந்துகொள்ளுகிறது. அதின் பெயரைக் கூப்பிட்டால் உடனே ஓடி வருகிறது. அந்தப் பெண்ணுடன் ஒரு நாய்க்குட்டி போல் கூடவே போகிறது. பிரிந்திருப்பதே இல்லை.

புஷ்பக் கெடிகாரம்

புஷ்ப விமானம், புஷ்பக் காவடி எனக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், புஷ்பக் கெடிகாரமென இப்பொழுதுதான் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் இந்தப் புஷ்பக்



கெடிகாரமொன்றை செல்ட்டன்ஹாமில் ஸ்ட்ரெப்ட் என்பவர் செய்திருக்கிறார். இந்தக் கெடியாரத்தைச் செய்துமுடிக்க அவர் சுமார் 230 வகையான செடி கொடிகளையும், புஷ்ப செடிகளையும் உபயோகித்திருக்கிறார். இந்தக் கெடியாரத்தை அவர் அழகுக்காகச் செய்து வைத்திருக்கவில்லை மின்சார சக்தியின் உதவியைக் கொண்டு இந்தப் புஷ்பக் கடிகாரத்தை நேரம் காட்டும்படி செய்திருக்கிறார். நேரம் காட்டுவதில் இந்தக்கடியாரம் தவறுவதே இல்லை மணி அடிக்கிறது. மணி சப்தமும் கேட்க இன்பமாயிருக்கிறது இந்தக் கெடியாரத்தைச் செய்தவர், அவருடைய ஓய்வு நேரங்களிலேயே இதைச் செய்து முடித்திருக்கிறார்.

தட்டியெழுப்பும் கெடியாரம்

டைம்பீஸ்-கடிகாரங்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு மணி யடித்து நம்மை எழுப்புவதுண்டு. ஆனால், கையில் கட்டும் கெடிகாரங்கள் அப்படி மணியடித்து எழுப்புவது கிடையாது. படத்தில் காட்டியிருக்கும் கைக் கெடிகாரம் மணியடித்து எழுப்பி விடும். அதுமட்டுமல்ல. குறிப்பிட்ட நேரத்தில், நாம்யாரையாவது சந்திக்க வேண்டியிருந்தால் அல்லது, எந்தக் காரியத்தையாவது செய்ய வேண்டியிருந்தால், அந்த மணிக்கு இந்தக் கைக் கெடிகாரத்தைத் திருப்பி வைத்தால் போதும். குறிப்பிட்ட நேரத்தில் இந்தக் கைக் கடிகாரம் நமது கையில் அடித்து, நமக்கு ஞாபகமூட்டுகிறது! நாம் கவனியாமலிருந்தால் கையில் டக்-டக் என இடித்துக்காட்டி ஞாபகமூட்டிக் கொண்டேயிருக்குமாம்!

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்
ஜீவிய சரித்திரம்

இந்திய நாட்டின் இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரம். சுபாஷ் போஸின் வீர வாழ்க்கையையும், தியாக புத்தியையும், சீரிய குணத்தையும் இந் நூலில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் இதை வாசித்துப் பயன் பெறுவார்களாக.

புத்தகம் 1 க்கு விலை அணா 4.
5 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புத்தகம் அனுப்பப்படும்.
மலாய் நாட்டிலுள்ளவர்களும், மற்ற அந்நிய நாட்டிலுள்ளவர்களும் 0—8—6 ஸ்டாம்பு அனுப்பிவைத்தால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "தமிழ்மணி"

மேகவியாதி

என்னும் விஷப்பாம்பைக் கொன்று தேகாரோக்கியத்தைப் பெற்று இன்பமான இல்லற வாழ்க்கையை அனுபவிக்க
பங்காமிருதவடி
என்னும் மருந்து தகுந்த உபாயம்
20 மாத்திரையடங்கிய டப்பி ரூ. 1-
40 " ரூ.
மதன மஞ்சரி பார்மஸி,
1-94 சைனாபஜார் ரோட் மதராஸ்
513 சூலியா தெரு, பினாங்
ஏஜண்டு: - ஓரியண்டல் ஸ்டோர்ஸ்



மோட்டார் வண்டிகள் நமது நாட்டிலுள்ள கட்டை வண்டிகள் மாதிரி மலிந்து போயின. நமது நாட்டிலேயே இப்படி யென்றால், இந்த மோட்டார்கள் உற்பத்தியாகும், அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? அங்கு அவை குப்பைகள்தான். பழுதாய்போன மோட்டார் வண்டிகளும், உடைந்துபோன மோட்டார்களும் மோட்டார் சாமான்களும் நியூயார்க் நகரத் தெருக்களில் குவிந்து விடுகின்றன. இந்தக் குப்பைகளைத் தெருக்களிலிருந்து அகற்றிச் சுத்தஞ்செய்ய மட்டும் நியூயார்க் நகர சபைக்கு ஒவ்வொரு மாதமும் 50,000 டாலர்கள் செலவாகின்றன.

* * *

கடல் பாசியைப் பதப்படுத்திச் சாப்பிட்டால் தேகத்துக்கு ரொம்ப நல்லதாம். மெலிந்த தேகமுடையவர்களைக்கூட நல்ல திடகாத்திர சரீரமுடையவர்களாகச் செய்துவிடுமென டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆகவே கடல் பாசியைப் பக்குவப்படுத்தி டின்களில் அடைத்து வியாபாரஞ் செய்ய மேனாடுகளில் வேலை செய்து வருகிறார்கள். இந்தக் கடல் பாசியில், அயோடின், கல்சியம் முதலிய சத்துக்கள் அடங்கியிருக்கின்றனவாம்.

* * *

கெய்கிலி என்னுமிடத்தில் வசித்துவரும் ஸ்டான்லி போர்டுமன் என்பவருக்கு வயது 18 தான். இவர் ஏசுகிறிஸ்து உபதேசித்த பரமண்டல பிரார்த்தனையை ஒரு பட்டாணிக் கடலையிலும், ஆங்கில பாஷையிலுள்ள 26 எழுத்துக்களையும் ஒரு அரிசியிலும், மகா சிறிய எழுத்துக்களாலும் எழுதியிருக்கிறாராம்.

* * *

கிழவரைக் குமரராக்கும் முறைகளைப்பற்றி எத்தனையோ டாக்டர்கள் யோசித்து வருகிறார்கள். அதற்காக ரஷியா டாக்டர் வாரனாப் குரங்கு சுரப்பிகளை உபயோகிக்கும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். அதில்கூட அவர் பூர்ண வெற்றியடையவில்லை. இப்பொழுது வேறொரு டாக்டர் ஒரு புது முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். 250 வருடங்களுக்கு மேல், 700 வருடங்கள் வரை ஜீவிக்கும் கிழட்டு ஆமைகளின் கொழுப்பை உருக்கி எடுத்த எண்ணெயைத் தேய்த்து வந்தால் தேகத்துக்கு நல்ல பலம் ஏற்படும். அத்துடன் வயோதிகத்தில் ஏற்படும் சுருக்குகளைக்கூட இந்த எண்ணெய் போக்கி, முகத்துக்கு வாலிபத் தோற்றத்தைக் கொடுத்து விடுமாம்.

* * *

மலேரியா முதலிய ஜுரங்களுக்குக் கொசுக்கடியே காரணமென்று சிலர் கூறுகிறார்கள். ஆகவே, வாஷிங்டன் ஆராய்ச்சி சாலையில் சுமார் 200 வகைக் கொசுக்களைப் பிடித்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அந்தக் கொசுக்களுக்கு வாரமொன்றுக்கு மனித இரத்தம் கொடுக்க ரோல்ஸ்மித் என்பவரைச் சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். இவருக்கு இந்தப் பிழைப்பைத் தவிர வேறு பிழைப்புக் கிடையாது. கொசுக்களைக் கடிக்க விட்டு, அவைகளுக்கு இரத்தம் கொடுத்து, அதனால் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்.

* * *

மீன் பிடிப்பதற்கு அபூர்வமான தூண்டில் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தூண்டில் வைத்திருக்கும் இரையை ஒரு மீன் பிடிக்க வந்தால், அதின் நிழல் வேறொரு கண்ணாடியில் தெரிகிறது. அந்த நிழலைக் காணும் மீன், வேறொரு மீன் இரையைத் தின்ன வருவதாக எண்ணி, அவசரமாகத் தூண்டிலிருக்கும் இரை மீது பாய்ந்து தின்னுகிறது. அவசரமாக விழுங்குவதால் அந்த மீன் எளிதில் தூண்டிலகப்பட்டுக் கொள்ளுகிறது. சாதாரணத் தூண்டிலில் பிடிக்கும் மீன்களைவிட இந்த அபூர்வமான தூண்டிலைக் கொண்டு ஏராளமான மீன்களைப் பிடிக்க முடியுமாம்.

* * *

சால்ட்டர்ஸ் கேட் என்னுமிடத்தில் ஒரு சிறு ஹோட்டலிருக்கிறது. அங்கு சென்ற 133 வருடங்களாக அடுப்பில் நெருப்பு இருந்து கொண்டேயிருக்கிறது. நெருப்பு அணைந்ததே கிடையாது. நெருப்பை அணைய விடாததற்கு ஒரு காரணமுண்டு. குருட்டு நம்பிக்கையே காரணம். அந்த அடுப்பிலுள்ள நெருப்பு அணைந்து விட்டால், காலஞ்சென்ற அந்த ஹோட்டல் சொந்தக்காரரின் ஆவி அங்கு தோன்றி ஹோட்டலிலுள்ளவர்களைப் பயமுறுத்துமென்ற மூட நம்பிக்கையே இதற்குக் காரணம். இன்று வரையில் அந்த ஹோட்டலில் சதா நெருப்பு எரிந்து கொண்டுதானிருக்கிறது.

* * *

இங்கிலாந்தை ஆண்டு வந்த எட்டாவது ஹென்ரி மன்னர் வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்திலிருந்த ஒரு சந்நியாசியைக் கொன்று விட்டாராம். அந்தச் சந்நியாசியின் ஆன்மா இன்றளவும் வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்தில் திரிந்து கொண்டிருக்கிறதாம்! அந்த ஆன்மாவைச் சமீபத்தில்கூட ஒருவர் பார்த்து பயந்து ஓடியதாகக் கூறுகிறார்கள்!

*

சிக்காகோவில் கலியாணமான ஒருவர் அவருடைய மனைவியின் பிறந்த நாளன்று ஒரு புஸ்தகத்தை பரிசாக அளித்தார். மனைவி அதை ஆவலுடன் பிரித்துப் பார்த்தாள். "தற்கொலை செய்து கொள்ளுவதற்கு 200 வழிகள்" என்பதே அந்த புஸ்தகத்தின் தலையங்கமாக இருந்தது. மனைவிக்குக் கோபமும், அவமானமும் ஏற்பட்டது. உடனே அந்தப் புஸ்தகத்தைக் கொண்டுபோய், கோர்ட்டில் ஆஜர் செய்து புருஷனை விவாக ரத்து செய்ய வழக்குத் தொடர்ந்தாள்.

* * *

மேனாடுகளில், ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குப் போகாவிட்டால் பெரிய குற்றம். கோவிலுக்குப் போகாதவர்களுக்குச் சிறைத் தண்டனை விதித்து வந்தார்கள். கோவிலில் குருக்கள் பிரசங்கஞ் செய்யும்போது, கோவிலிலிருந்து வெளியில் போகக் கூடாது. அப்படி மீறிப் போனாலும் சிறைத் தண்டனை கிடைக்கும். சிறுவர் சிறுமிகள் கூட வெளியில் போகக் கூடாது.

* * *

லிபியிலுள்ள சில பிரதேசங்களில் பெரிய சிலந்திப் பூச்சிகளிருக்கின்றன. அவை கடித்தால் பெரிய கத்தி கொண்டு வெட்டியது போல் காயங்களேற்படுமாம். அண்டோபகாஸ்டாவா என்னும் நகரில் சுமார் 200 பேர்களை ஒரு சிலந்தி கடித்துக் காயப்படுத்தி விட்டது. அதனால் நகரமெங்கும் பெரும் பீதி ஏற்பட்டிருக்கிறதாம். அநேகர் நகரிலிருந்தே குடும்பங்களுடன் காலி செய்து விட்டனர்.

* * *

விம்பில்டன் என்னுமிடத்தில் டர்னர் என்னும் பெண் ஒரு பூனை வளர்த்து வருகிறாள். அந்தப் பூனை 35 ராத்தல் நிறையிருக்கிறது. 37 அங்குலம் நீளம். அதின் வயிற்றின் சுற்றளவு 33 அங்குலம். உலகிலேயே பெரிய பூனை இதுதான். இது வெறும் இறைச்சியைத் தவிர வேறு எதுவும் சாப்பிடுவதே இல்லை. மீன், பால் முதலியவைகளைக் கூடத் தொட்டுப் பார்ப்பதில்லை.

இனாம்! * இனாம்!

½ அணா ஸ்டாம்ப் அனுப்புகிறவர்களுக்கு குலபஹார் ஹேர் ஆயில் சாம்பில் புட்டி 1, இலவசமாக அனுப்பப்படும்.

—: தயாரிப்பவர்கள் :—
தாஜ்முல் ஹுசெய்ன்
வாசனைத் திரவிய வியாபாரி
எலிபெண்ட் கேட் ரோடு, மதராஸ்.

ஜெர்மன் ரிப்பீடிங் அலாரம் பிஸ்டல்



இது நூதன முறையில், உயர்தர எஃகுத் தகட்டினால் தயாரித்தது. உள்ளே பலத்த ஸ்பிரிங், ஆக்ஷனுடன் அமைக்கப்பட்டது. ஏககாலத்தில் எட்டு அல்லது பத்து வெடிகள் உடனுக்கு உடனே, கனத்த சப்தத்துடனும், நெருப்புடனும், புகையுடனும் கிளம்பி, எதிரிகளை பிரமிக்கச் செய்யும். இது உண்மையில், ஒரு பெரிய கைத் துப்பாக்கிக்கு ஒப்பானது.

50 கேப்புகளுடன் கூடிய பிஸ்டல் விலை ரூ 3-0-0
தபால் செலவு பிரத்தியேகம். தனியே கேப்புகள் 50-க்கு ரூ. 1.
எமது விலாசம்: பக்தா அண்டு கம்பெனி,
1-30, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை.

விலை ரூபா 1-0-0

மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

T. Kuppuswamy Naidu,
OPTICIAN



122 & 121, Moor Market, Madras.
PLEASE PAY US A VISIT.

குணத்தில் உயர்ந்தது!
மணத்தில் சிறந்தது!!
சகலருக்கும் உகந்தது!!!

"வீனஸ்"

தருமண பாக்குத்தூளே

ஏஜண்டுகள் தேவை
திருச்சினாப்பள்ளி, கோயமுத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிலோன், சிங்கப்பூர், ரங்கூன்.

வீனஸ் கம்பெனி,
860 பைகிராப்ட்ஸ் ரோடு,
ராயப்பேட்டை மதராஸ்

குறைந்த விலை! சிறந்த கதை!!

நவம்பர் மாதம் 20ந் தேதி வெளிவருகிறது!!!

"பசுபதி" சமூக சீர்திருத்த நாவல்

11 அத்தியாயங்கள் 120 பக்கங்கள் விலை 4 அணா

பணச்செருக்கு ஆபத்தில் உதவி, மாயவலை வஞ்சகர் நேசம், பணம் பறிக்கும் பகட்டு, கள்ளமற்ற உள்ளம், மாயா ஜாலம், மங்கையர் மகிழ்ச்சி, விவாக விமரிசை, பகட்கொள்ளை காட்டித்தந்த கன்னி, சிறைவாசம், காதலை உணர்தல் என்னும் பல பொருள்கள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும் இனிய நாவல் பொருத்தமான பல படங்கள் அமைப்பு வழவழப்பான மூவர்ண சினிமா ஸ்டார் படத்துடன் சித்தரிக்கப்பட்டது. இதுபோன்ற பல கதைகள் பொருத்தமான பல படங்களுடன் பிரதி மாதமும் தொடர்பாக குறைந்த விலையில் (2 அணா 1 அணா) வெளியிடப்படும்.

எமது அடுத்த வெளியீடு:—குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிக்கலாமா?...நக்ஷத்திரத்தின் சுபசரிதை வஸந்தாபேதமி?...எதிர்பாருங்கள்

எல்லா ஊர்களிலும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம.

பாரதி பிரசுராலயம், ஊர்காம் (கே. ஜீ. எப்)

ஸ்தாபிதம். 1914 டெலிபோன் நெம்பர் 2280
புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேச முதலியார்.

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள் இதர மிஷினெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59. பிராட்வே மதராஸ்.

வற்ரு பொக்கிஷம்

தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்ட இலட்சக்கணக்கான ஜனங்களை எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

காப்பாற்றி வந்திருக்கின்றன. சென்ற 57 வருஷங்களாக நாங்கள் கேட்காமலே வந்து குவிகின்ற நற்சாக்ஷிப் பத்திரங்களே மேற்படி மாத்திரைகள் குணங்கொடுப்பதில் குன்றாத பொக்கிஷமென்பதை நிரூபிக்கின்றன.

நீங்களும் உபயோகித்து
நலத்தையடையுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0

இனும்! போஜன விதிகள் இனாம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

கர்ப்ப சஞ்சீவி எண்ணெய்

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரவி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால பொருத்துகள், உள்ளங் மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல, காந்தல் எழுச்சி இருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செமடி ஜலம்கூட தூக்க முடியாத பலவீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளை யெல்லாம் நீர்த்து கர்ப்பப்பை சத்திகரிப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6 சிற மலடுநீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

ஒருவருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்

சித்த வைத்தியசாலை பழனி S. I

பிராஞ்ச்:—16, திருவல்லிகேணி ஹைரோடு, சென்னை.

பிரயாணத்திலும் சரி
வீட்டிலும் சரி

ருக்மணி குக்கர்

விபர புத்தகம் இனும்

அடுத்து ஒரு இருந்தால் சமையல் கவலையே இராது.

1 முதல் 16 பேர்களுக்கு
7 அளவுகள் உண்டு
குக்கர்கள் விற்பனை செய்ய
ஏஜண்டுகள் தேவை.

ருக்மணி குக்கர் கம்பெனி
14, கிழக்கு மாதாகோவில் வீதி,
ராயபுரம், சென்னை

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்

அதன் அநுபோக பயிற்சி முறையும்

மோட்டார்கார் ஓட்டவும், மோட்டார்கார் பாகங்களை கழற்றவும், பூட்டவும் ரிப்பேர் முதலான வேலைகள் தெரிந்துகொள்ளவும் விரும்புகிறவர்கள் எங்களிடமுள்ள "மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும்" என்ற நூலை வாங்கிப் படித்து பயன் பெறுவார்களாக. சித்திரங்களுடன் வெளிவந்திருக்கிறது. இப் புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் அதிக நன்மையடைவார்கள். சொற்ப அநுபோகமுள்ள மோட்டார்கார் டிரைவர்களும் இப் புத்தகத்தை படிப்பதினால் தங்களிடத்திலுள்ள குறைகளை நிவிர்த்தித்துக் கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2-0-0 தபால் செலவு ரூ. 0-6-0

முன்பணமாக ரூ. 2-6-0 அனுப்பப்படவேண்டும்.

மானேஜர், "தமிழ் மணி" சென்னை.

இந்தியா
தனிப்பிரதி
அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா
2—8—0
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 6
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ்  மணி

பர்மா, மலாய்
தனிப்பிரதி 0-1-6
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே,

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையின் மோகம்?—பாரதி

வசந்தா அல்லது நான்கு விரல் மர்மம்
என்னும் தொடர் கதையை எழுதிவந்த "தமிழ் மணி" ஆசிரியர் எழுதிய

சொக்கநாதன்

அல்லது

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல்

புஸ்தக ரூபமாக அதிசீக்கிரத்தில் வெளிவருகிறது
காதல், சோகம், ஹாஸ்யம், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
முதல்தரமான துப்பறியும் கதை.

HIGH CLASS MISKY

A

ASAFOETIDA

75 வருஷங்களாக
மிகப்பிரசித்தியுடன்
லக்ஷக்கணக்கான
இந்திய குடும்பங்கள்
தினம் உபயோகிப்பது
மிஸ்கி A மார்க்
பெருங்காயம்
A மார்க் பெருங்காயம்
வாங்கினால்
ஏமாற்றுவதற்கு இடமில்லை.
A மார்க் என்று கேளுங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்
கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. மதராஸ்

ஜண்டு
கேசரி ஜீவன்
தாதுவிருத்தியைக்
கொடுக்கும்
சிரேஷ்டமான டானிக்
நமது சப் ஏஜண்டுகளிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
[கேட்லாக் இனாம்]
தமிழ் நாட்டில் சப் ஏஜண்டுகள்

மதுரை:—டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, வடசித்திரை தெரு.
திருச்சி:—என். வைத்யா அண்டு கம்பெனி, விநாயகர் மெடிகல் ஹால்.
புதுக்கோட்டை:—அண்ணா கெமிஸ்ட்ஸ்.
சாலைராம்தம்:—கமனசா மெடிகல்ஹால்.
கடலூர்:—டாக்டர் எஸ். கோவிந்தசாமி நாயுடு.
தஞ்சாவூர்:—பி. வி. முத்துகிருஷ்ண ராஜா.
கடலூர்:—ஸ்ரீராம பார்மஸி, புதுப்பாளையம்.

or. From Madras Presidency Agents
Damoder & Co. 78, China Bazaar Road, Madras.

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St., G. T. Madras.